புதுமலர்: 21 இதழ்: 02 பங்குனி - சித்திரை

# அனல்

01.03.2024

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா



# தேவன் ஏற்றுக்கொள்ளும் பாவ அறிக்கை

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. சிறுவர் வட்டம்
05. வினா விடை - 120
06. குறுக்கெழுத்துப்போட்டி - 118
07. வாலிபர் வளாகம்
08. பெண்கள் பக்கம்
09. அருட்பணியாளர் சரிதை
10. அனலின் ஆன்மீக விருந்து
11. ஏன் கெட்டுப்போனான்




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.


**எழுத வேண்டிய முகவரி:**

சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, அன்பின் வாழ்த்துக்கள்.

மறுபடியும் இவ்விதழினூடாக உங்களைச் சந்திப்பதில் சந்தோசம். தேவனுடைய பெரிதான கிருபையினால் இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப் பட்டவர்களே, மறுபடி பிறந்தவர்களே தேவனுடைய விருப்பத்தின்படியான வாழ்வு வாழ உங்களை அர்ப் பணித்துக் கொள்ளுங்கள். எம்மைத் தம்முடைய சொந்த ஜனமாக மாற்றியிருக்கிறார். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதே அவர் எமக்குத் தந்த சலாக்கியம். அவருடைய பிள்ளைகளாய் இருக்கும் நாம்

**நீதி செய்ய வேண்டும் - 1யோவான் 2:29**

**பாவம் செய்யக்கூடாது - 1யோவான் 3:9**

**தன்னைக் காக்க வேண்டும் - 1யோவான் 5:18**

**அன்புள்ளவர்களாயிருக்க வேண்டும் - 1யோவான் 4:7**

**தேவனை அறிந்திருக்க வேண்டும் - 1யோவான் 4:7**

பொல்லாங்கு நிறைந்த உலகத்திலே தேவ பிள்ளைகளே உங்கள் சாட்சியைக் காத்துக்கொள்ளுங் கள். கிறிஸ்துவை அறியாத மக்கள் உங்கள் சாட்சி வாழ்வின் மூலம் இயேசுவைக் காணட்டும்: தேவ பிள்ளைகளாய் மாறட்டும்.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**

- ஆசிரியர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்னிப்பு!

❒ வை. விமலதாஸ்

ஓர் அரசர் இருந்தார், அவரிடம் பத்து காட்டு நாய்கள் இருந்தன. தவறு செய்த தனது ஊழியர்களை அந்த காட்டுநாய்களுக்கு அவர் இரையாக்குவார்.

ஒருநாள் வேலைக்காரர்களில் ஒருவர் தவறான ஒரு கருத்தை சொன்னார், அதைக் கேட்ட அரசருக்கு கோபம் வந்துவிட்டது.

'இவனை நாய்களுக்கு தூக்கி எறியுங்கள்'. என்று கட்டளையிட்டார்.

வேலைக்காரன் கெஞ்சினான், 'நான் உங்களுக்கு பத்து வருடங்களாக சேவை செய்தேன், நீங்கள் இப்படி ஒரு தண்டனையை எனக்குத் தரலாமா? தயவுசெய்து என்னை அந்த நாய்களுக்கு தூக்கி எறிவதற்கு முன் பத்து நாட்கள் அவகாசம் தாருங்கள்!'

ராஜா ஒப்புக்கொண்டார். அந்த பத்து நாட்களில், வேலைக்காரன் அரசனின் நாய்களைப் பராமரித்துக் கொண்டிருக்கும் காவலரிடம் சென்று, அடுத்த பத்து நாட்களுக்கும் தான் அந்த நாய்களுக்கு சேவை செய்ய விரும்புவதாகக் கூறினான்.

இதைக் கேட்ட காவலர் குழப்பமடைந்தார், ஆனாலும் ஒப்புக்கொண்டார். அடுத்த பத்து நாட்கள் அந்த வேலைக்காரன் நாய்களுக்கு உணவளித்தான், அவற்றைச் சுத்தம் செய்தான், குளிப்பாட்டவும் தொடங்கினான். அவற்றிற்கு அனைத்துவிதமான வசதிகளையும் வழங்கி அதன் மீது அன்பு காட்டினான்.

அரசர் குறித்த பத்து நாட்கள் முடிந்தது. வேலைக்காரனைத் தண்டிப்பதற்கான வேளை வந்தது. அவனை நாய்களிடம் தூக்கி எறியும்படி அரசர் உத்தரவிட்டார். அதற்கிணங்க காவலர்கள் அந்த வேலைக்காரனை நாய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் இடத்திற்குள் தூக்கி எறிந்தார்கள். அந்த நாய்கள் ஓடிவந்து அந்த வேலைக்காரனின் கால்களை நக்கத் தொடங்கின. இதைக் கண்டு அனைவரும் வியந்தனர்! இதைப் பார்த்து அரசன் திகைத்தான், 'என் நாய்களுக்கு என்ன நேர்ந்தது?' இவனை கடித்து குதறி சாப்பிட்டுவிடும் என்று நினைத்தேன். ஆனால் என் நாய்கள் இவனை நக்கி குழைந்து கொண்டு இருக்கின்றனவே என்றான்.

இதைக் கேட்ட அந்த வேலைக்காரன் பதிலளித்தான், 'நான் பத்து நாட்களுக்கு மட்டுமே இந்த நாய்களுக்கு சேவை செய்தேன், அவை என் சேவையை மறக்கவில்லை. நான் உங்களுக்கு பத்து வருடங்கள் சேவை செய்தும் என் முதல் தவறைக்கூட மன்னிக்காமல் நான் உங்களுக்கு செய்த அனைத்தையும் மறந்து என்னை தண்டிக்க உத்தரவிட்டீர்களே!' என்று ஏக்கத்தோடு கூறினான்.

இதைக் கேட்ட அரசர் தனது தவறை உணர்ந்து வேலைக்காரனை உடனடியாக விடுவிக்க உத்தரவிட்டார்.

ஆம் நண்பர்களே! நம்மிலும் எத்தனை பேர் இந்த அரசனைப் போல இருக்கின்றோம். நமக்காக உதவி செய்தவர்களை, நம்மை உயர்த்திவிட்ட வர்களை, நமக்கு ஆலோசனை கூறியவர்களை ஏதோ ஒரு காரணத்தினால் தூக்கி எறிந்து இருக்கின்றோம். அந்த நாய்களைப் பாருங்கள், பத்து நாட்கள் தனக்கு சேவை செய்தவனைக்கூட மறக்காமல் அவனுக்கு நன்றியைத் தெரிவித்தது. ஆனால் நாம் எத்தனை நன்மைகளை பெற்று அனுபவித்தும் இன்று அவர்களுக்கு நன்றியில்லாதவர்களாய் இருக்கின்றோம். நாம் நன்றியுள்ள வர்களாயும், மன்னிக்கிறவர்களாயும் இருக்கவேண்டும்.

**லூக்கா 17:3 உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக.**

---

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

தமஸ்குவில் தரிசனம் பெற்றவனும், அப்போஸ்தலரில்
பிரதானமானவனான ஒருவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்து,
பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படவும் ஜெபித்தான். ஜெபித்தது யார்?
அந்த அப்போஸ்தலன் யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2024 தை - மாசி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

லாமேக்: அறிமுகப்படுத்தியது:- இரண்டு மனைவி முறை:
பின்பற்றியது:- காயீனைப்போல கொலை செய்தது **(ஆதியாகமம் 4:19-24)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் நம்பிக்கை வீண் போகாது



❑ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு இனிய வாழ்த்துக்கள்.

தேவ கிருபையினாலே நாம் இந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இந்த நாள் வரை பாதுகாக்கப்பட்டு, போஷிக்கப்பட்டு அவராலே வழிநடத்தப்படுகின்றோம். நாம் நிர்மூலமாகாதிருக்கிறது அவருடைய கிருபையே. அவைகள் ஒவ்வொரு நாளும் புதிதாகவே இருக்கிறது. அல்லேலூயா...

**நீதிமொழிகள் 24:14b உன் நம்பிக்கை வீண்போகாது.**

நாம் ஒவ்வொருவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலே நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கின்றோம். இயேசு கிறிஸ்து வாக்குப் பண்ணிய நித்திய ஜீவனை எதிர் நோக்கியவர்களாக எம்மை நாளாந்தம் ஆயத்தப்படுத்தி ஆயத்தமாக காணப்படுகின்றோம். இந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.

ஆனாலும் எமது நாளாந்த வாழ்க்கையிலே எமக்கு வரும் போராட்டங்கள், நெருக்கங்கள், பல தாக்குதல்கள், அவமானங்கள், குறைவுகள் நாம் தேவன் மேலே வைக்கின்ற நம்பிக்கையில் சில அல்லது பல ஈடாட்டங்களை கொண்டுவருவதற்கு போதுமானவையாக காணப்படுகின்றன.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் எம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஸ்திரத்தன்மையைக் குறித்து அவதானமாக இருப்பது நல்லது.

**11இராஜாக்கள் 18:5 அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை.**

ஆம் அன்பான சகோதர சகோதரிகளே இந்த யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் வாழ்க்கையிலே ஒரு பெரிய போராட்டம். என்ன போராட்டம்?

சனகெரிப் என்று சொல்லப்படும் அசீரிய ராஜாவாகிய மகாராஜா எல்லா தேசங்களையும் யுத்தம்பண்ணி கைப்பற்றி எருசலேமையும் முற்றுகை போட்டு அதை அழிக்கும்படியாக நெருக்கி நிற்கும் வேளையிலே எசேக்கியா ராஜா:

**11இராஜாக்கள் 18:7b அவன் அசீரியா ராஜாவைச் சேவிக்காமல், அவன் அதிகாரத்தைத் தள்ளிவிட்டான்.**

நம்முடைய வாழ்க்கையிலும் பிசாசானவன் நம்மை அழிப்பதற்காக நம்முடைய குடும்பங்களை, திருச்சபையை அழிப்பதற்காக செயற்படுகின்ற வேளைகளிலே நாம் வேறு எதன் மேலும் எம்முடைய நம்பிக்கையை வைக்காமல் ஜீவனுள்ள தேவன் மேலேயே எம்முடைய நம்பிக்கையை வைக்க வேண்டும்.

எசேக்கியா ராஜா தன்னுடைய பெலத்தை, இராணுவத்தை, ஞானத்தை, அறிவை நம்பவில்லை. மாறாக தேவனை மாத்திரம் சார்ந்திருந்து ஜெயமெடுத்தான். சனகெரிப் ராஜாவின் படை முழுவதையும் தேவன் தூதனை அனுப்பி சங்கரித்தார். ‘அவனுடைய நம்பிக்கை வீண் போகவில்லை’.

**சங்கீதம் 22:8 கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள்.**

ஆம் நாம் தேவனைத் தேடுவதைப் பார்த்து அவர் மேல் வைத்திருக்கிற நம்பிக்கை விசுவாசத்தை அவதானித்து ஒவ்வொரு கூட்டங்களுக்கும் மற்றைய உறவுகளின் நல்ல விசேஷங்களை ஒதுக்கிவிட்டு தேவனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை பார்த்து உலகத்தார் என்மேல் ஒரு நோக்கமாக இருப்பார்கள்.

எப்படியென்றால் நமக்கு திடீரென்று ஒரு வியாதியோ அல்லது உயிர் ஆபத்தை உண்டாக்கக்கூடிய மோசமான விபத்தோ, எதிர்பாராத பெரிய பிரச்சினையோ, முகங்கொடுக்க முடியாத நிலையோ நமக்கு உண்டாகும் போது அடுத்தடுத்து மோசமான காரியங்கள் நடக்கும் போது உலக மனிதர்கள் தேவனை அறியாதவர்கள் சொல்வார்கள்:

பார் விடிய விடிய சேச்... சேச் என்று சென்றார்கள். ஆனாலும் இப்படிப்பட்ட காரியங்கள் நடந்தும் இன்னும் ஆண்டவரைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். வேறு வேலையில்லை... என... இப்படியான பல நம்பிக்கையற்ற வார்த்தைகளை அள்ளி எறிந்து எம்முடைய நம்பிக்கையை குழப்புவதற்கு – உடைப்பதற்கு யோசிக்கும் வேளையிலே...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முடைய நம்பிக்கை எப்படி யாக முடிகின்றது. தடம் மாறுகின் றோமா? சில நிமிடம் எம்மை யோசிக்க வைக்கின்றதா? அவர்கள் சொல்வதும் சரிதானே என நினைக்க வைக்கின்றதா?

அல்லது தேவன் மேல் வைத்த நம்பிக்கையிலே இன்னும் உறுதியாக நிற்கின்றோமா?

இன்றைக்கும் அனேகர் தேவனைவிட்டு பின்வாங்கிப்போய் சபைக்கு வருவதை தவிர்த்து, சக மனிதர்களோடு உறவு வைப்பதை தவிர்த்து கர்த்தரைத் தேடாமல் அந்நிய காரியங்களுக்கு மெதுவாக முக்கியத்து வம் கொடுக்க ஆரம்பித்து பிரச்சினை களாகின்ற போது தேவன் மேல் வைத்த நம்பிக்கையை விட்டு விலகிப்போகி றார்கள்.

இது அவர்கள் நம்பிக்கையில் உறுதியைக் காத்துக் கொள்ளவில்லை என்பதனைக் காண்பிக்கிறது.

எந்த நிலையிலும் நாம் தேவனிடம் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தால் தேவனும் எம்முடைய நம்பிக்கைக்கு உண்மையுள்ளவரா கவே இருப்பார். அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.

பரிசுத்த வேதாகமத்தின் சரித்திரத்திலே முழு இருதயத்தோடும் தேவனை நம்பி யாரும் கெட்டுப் போகவில்லை. அப்படியே தேவனும் நம்பிய யாரையும் கைவிடவும் இல்லை; விடுவதும் இல்லை. எனவே நீங்கள் தேவனுக்காக காத்திருக்கும் அல்லது பொறுமையாக இருக்கும் காரியத் திலே நிச்சயமாக வெற்றியுண்டு. தேவன் உங்களுக்கானதை திறம்பட செய்து முடிப்பார்.

**சங்கீதம் 22:4 எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கைவைத்தார்கள்; நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்.**

எனவே பிரியமானவர்களே நாமும் நம் தேவன் மேல் வைத்த நம்பிக்கையிலே எல்லா காலங்களி லும் உறுதியாக இருப்போம். எம் நம்பிக்கை ஒரு போதும் வீண்போகாது.





**சரியான விடை எழுதியவர்களில் பராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

**வினாவிடை - 119**
த.சனுஜா
(புங்குடுதீவு)



**குறுக்கெழுத்துப் போட்டி - 117**
பி.நேசமணி
(மானிப்பாய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒரு அடி இறக்கும்

❑ ஜசிந்தா அக்கா




**ஜோ**ன் என்ற சிறுவன் ஞாயிறு பாடசாலைக்குச் செல்லும் பழக்கம் உடையவன். அங்கு ஆசிரியர் கற்றுக் கொடுக்கும் பாடங்களைக் கவனமாகக் கற்று வந்தான். ஒரு நாள் இயேசுவைத் தன் உள்ளத்திற்குள் ஏற்றுக்கொண்டான். நாட்கள் செல்லச் செல்ல கற்றுக் கொள்ளும் பாடங்களைப் போல் நடக்க ஆரம்பித்தான். அவன் உள்ளம் மிகுந்த சந்தோஷத்தால் நிரப்பப்பட்டது.

தான் சந்தோஷமாய் இருப்பது போல தனது அப்பாவும் இயேசுவை அறிந்து சந்தோஷமாக வாழ வேண்டும் என்று மிகவும் ஆவலாய் இருந்தான். அவ் வேளையில் அப்பாவின் பிறந்த நாள் வந்தது. வேதாகமம் ஒன்றை வாங்கிப் பிறந்த நாள் பரிசாகக் கொடுத்தான். அப்பா அதைக் கரத்தில் வாங்கினார். ஆனால் உள்ளத்தில் வாங்கவில்லை. அப்பா ஒரு சரித்திரப் பேராசிரியர். ஆகவே வேதாகமத்தை வாசித்துப் பார்த்து மகனே இது ஒரு நல்ல சரித்திரப் புத்தகம் என்றார்.

ஜோன் மிகுந்த துக்கமடைந்தான். அப்பாவிற்காக ஜெபிப்பதைவிட வேறு எதுவும் செய்ய முடியாது என்று நினைத்தவன் ஜெபிக்கத் தொடங்கினான். ஒரு நாள் அவன் ஜெபிக்கும் பொழுது 'ஒரு அடி இறக்கும் ஆண்டவரே, ஒரு அடி இறக்கும் ஆண்டவரே' என்று ஜெபிக்கும் சத்தத்தை அவனது தாயார் நன்றாக உற்றுக் கவனித்தாள். ஜெபம் முடிந்ததும் மகனே 'ஒரு அடி இறக்கும்' என்று ஏன் ஜெபித்தாய்? என்று கேட்டாள். அம்மா, அப்பாவிற்கு எல்லா அறிவும் தலைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இருக்கிறது. அறிவை எல்லாம் ஒரு அடி கீழே இறக்கி இருதயத்திற்குள் கொண்டு வாரும் என்று ஜெபித்தேன் அம்மா என்றான்.


ஜோனின் ஜெபத்தை இயேசு கேட்டார்.

இயேசு அப்பாவின் முகத்தை நோக்கிப் பார்க்கும் பிள்ளைகளே உங்கள் அப்பா, அம்மாவிற்காக இயேசுவிற்கு நன்றி சொன்னீர்களா? அவர்கள் வேத வசனத்தின் அறிவின்படி நடக்க வேண்டும் என்று ஜெபியுங்கள். உங்கள் ஜெபத்தையும் இயேசு கேட்பார்.

**நீதிமொழிகள் 23:18 நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது.**

# வினா விடை - 120

01. கை கால்களின் பெருவிரல்கள் தறித்துப்போடப்பட்டவன் யார்?
02. யாரை அக்கினியால் சுட்டெரித்து அதன் மேல் பெரிய கற்குவியலை குவித்தார்கள்?
03. ஒரு பெரிய சேனைக்கு கண் மயக்கம் உண்டாகி தடுமாறினது எப்போது?
04. 'அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்புவியுங்கள்' என்ற வசனம் எங்கே உள்ளது?
05. 'ஒரு தாலந்து நிறை பொற்கிரீடம்' யாருடையது?
06. சூரியனையும் சந்திரனையும் நடுவானில் தரித்து நிற்கப்பண்ணினவன் யார்?
07. 'கிழக்கே இருக்கும் சூரியனை நமஸ்கரித்தார்கள்' என வாசிப்பதெங்கே?
08. 'உன் மந்தைகளின் மேல் கவனமாயிரு' என்னும் ஆலோசனை வசனம் எங்கு உள்ளது?
09. தகப்பனையும் மகளையும் சுட்டெரித்தவர்கள் யார்?
10. 'ஒரு தாலந்து நிறை ஈயமூடியைக் கண்டது' யார்?



**மீட்பின் ஆண்டு - 2024**
**கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீக்கலாக்கி மீட்பார்.**
**மீகா 4:10**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | 02 |
| | | 04 | | | 03 | | | |
| | | | | | | 05 | | |
| | | | | | | | 06 | |
| | | 07 | | | | | 08 | |
| | | | | | | 09 | | |
| 10 | | | | | | | | 11 |
| | | | | | | | | 12 |
| 13 | 14 | | | | | | | 15 |

## குறுக்கெழுத்துப் போட்டி 118

**இடமிருந்து வலமாக**

01. 'செத்த நாயைப் போலிருக்கிற என்னை நீர் நோக்கிப்பார்க்கிறதற்கு உமது அடியான் எம்மாத்திரம்' எனக்கூறியவன்
07. '..................................' நிறைவேறுவது ஆத்துமாவுக்கு இனிது'
09. யாகாசிலே பாளயமிறங்கி இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணியவன்
10. தரியு ராஜாவின் கட்டளையை மாற்றுகிறவனின் வீடு இவ்வாறு ஆக்கப்படும்
14. பிரபுக்களின் வார்த்தையைக் கேட்டவுடன் தன் தலையிலும் தாடியிலுமுள்ள மயிரைப் பிடுங்கித் திகைத்தவன்

**வலமிருந்து இடமாக**

03. கேபார் நதியண்டையில் கர்த்தருடைய கரம் இவன் மேல் அமர்ந்தது
05. ராகேலின் கல்லறை இங்கே இருந்தது
06. இவளின் செய்கையைப் பற்றி தெபோராள் தீர்க்கதரிசனமாய் சொல்லியிருந்தாள்
09. இது 'அனுப்பப்பட்டவன்' என அர்த்தப்படுகின்றது
11. 'நம்பிக்கையிருக்கும் மட்டும் உன் மகனை ...................... செய்'
12. செபுலோன் கோத்திரத்திலிருந்து கானானை சுற்றிப் பார்க்க அனுப்பப்பட்டவன்
15. பாபிலோனின் ஞானிகளை கொலை செய்யும்படி புறப்பட்டவன்

**மேலிருந்து கீழாக**

02. 'என் தேவனுடைய கரம் என் மேல் நன்மையாக இருக்கிறது' எனக் கூறியவன்
04. இஸ்ரவேல் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி இந்த மலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள்

**கீழிருந்து மேலாக**

08. எலியாக்கீமின் இன்னுமோர் பெயர்
13. இவைகளைப் பார்க்கிலும் சவுலும் யோனத்தானும் வேகமுள்ளவர்கள்
14. 'இருப்புக்காளவாய்' என்று கூறப்பட்டுள்ள தேசம்
15. இவன் கடிகாரத்தில் சாயை பத்து பாகை பின்னிட்டுத் திரும்பியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ போதகர் வை.தேவதாஸ்




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே! இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள். உங்களை மறுபடியும் இவ் அனல் சஞ்சிகை மூலமாக விசாரிக்க கிருபை தந்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம். நீங்களும் உங்கள் குடும்பமும் சமாதானத்தோடிருப்பதற்கு தேவன் கிருபை செய்வாராக. **'உங்கள் படிப்புக்கள், தொழில் துறைகள், பிரயாசங்கள் அனைத்தும் சாபமின்றி ஆசீர்வாதமாக இருப்பதற்கு தேவன் கிருபை செய்வாராக.'** கர்த்தருடைய பரிசுத்த வேதாகமத்திற்குட்பட்டு நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சிகளையும் தேவன் ஆசீர்வதித்து தடைகளை நீக்கித் தருவாராக.

இவ் வாலிபர் பகுதியில்:

**'நன்மையா? தீமையா? எதனைத் தெரிவு செய்வது? தீர்மானம் உன்னுடைய கரங்களிலே உள்ளது: ஆகவே உங்களுடைய முடிவு என்ன?'**

என்ற தலைப்பிலான தேவசெய்திகளை தொகுத்து எழுதி வருகின்றோம். ஒரு சிலர் இச் செய்திகளால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டதைக் குறித்து, குறிப்பாக வயது முதிர்ந்தோரும் கூட வாசித்து உங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தீர்கள். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!. இன்னும் பலர் இதனை சரியாக வாசிக்காமல் இருப்பார்கள். எனவே தயவு செய்து அவர்களையும் வாசிக்க உற்சாகப்படுத்தும்படி கேட்டுக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரனே! சகோதரியே! இதனை நீங்கள் வாசிக்க முன்பதாக உங்கள் குடும்பத்தில் உள்ள மற்றவர்களும் வாசிக்கும்படி உற்சாகப்படுத்துங்கள். எல்லோரும் வாசித்த பின்பதாக இவ் வேதாகம சத்தியங்களைக் குறித்து குடும்பமாக தியானித்து ஒருவருக்கொருவர் விளக்கிக் கூறுங்கள். அது உங்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். தேவ செய்தியின் தொடருக்குள் செல்வதற்கு முன்பதாக வேதாகமத்தில் இருந்து ஓர் தியானப்பகுதியை முன்வைக்க விரும்புகின்றேன். நிச்சயம் தேவன் உங்களைப் பெலப்படுத்துவாராக.

வேதாகமத்தில் யோசேப்பு என்கின்ற ஓர் மனிதனைக் காண்கிறோம். யோசேப்பு தனது சிறு பிராயம் தொடங்கி பல இன்னல்களை அனுபவித்த மனிதனாக இருந்தார். குறிப்பாக, தனது வீட்டிலேயே தனது உடன் பிறந்த சகோதரர்களால் புரிந்து கொள்ளப்படாதவராக, அவர்களின் வெறுப்புக்கு ஆளாகியிருந்த நிலையில் ஒரு கட்டத்தில் தன் சகோதரர்களால் குழியில் தள்ளப்பட்டு அடிமையாக அந்நியருக்கு விற்கப்பட்டார்.

**அடிமையாகப்போனவர் பாவத்தின் பிடியில் சிக்கிக் கொள்ளாமல் பரிசுத்த வாழ்வில் உறுதியாக இருந்தமையால் அவருக்கு விரும்பாத பரிசாக சிறைச்சாலை கிடைத்தது.**

அங்கிருந்து அவர் தேவனால் உயர்த்தப்பட்டு அந்த நாட்டின் அரசனுக்கு அடுத்த பதவி நிலைக்கு உயர்த்தப்பட்டார். உயர்வுகளின் பின்பு அவருக்கு திருமணம் செய்து வைக்கப்படுகின்றது. எல்லாமே சரியாகிவிட்ட பின்பும் அவரது மனதில் தான் தனது தகப்பன் வீட்டில்பட்ட துன்பங்களின் காயங்கள் ஆறாததாகவும்; மறக்க முடியாததாகவும் இருந்தது. இந் நிலையில் அவர் ஆறுதலடையவும் அவரது மனக்காயங்கள் ஆற்றப்படவும் தேவன் ஒரு வழியை அவருக்கு திறந்து கொடுத்தார்.

**ஆதியாகமம் 41:51 யோசேப்பு: என் வருத்தம் யாவையும் என் தகப்பனுடைய குடும்பம் அனைத்தையும் நான் மறக்கும்படி தேவன் பண்ணினார் என்று சொல்லி, மூத்தவனுக்கு மனாசே என்று பேரிட்டான்.**

அவனுக்கு மனாசே என்ற பிள்ளை பிறந்த போது, அவன் சொன்ன வசனம் **'என் தகப்பனுடைய குடும்பம்'** என்று சொன்னதானது என் தகப்பன் வீட்டில் நான் பட்ட கஷ்டங்கள், தொல்லைகள், வேதனைகள், அவமானங்கள், நிந்தனைகள் அனைத்தையும் நான் மறக்கும்படி தேவன் எனக்கு கிருபை செய்தார் என்பதாகும்.

ஆம் பிரியமானவர்களே, மனாசே வரும் வரைக்கும் அந்த துன்பங்களை அவரால் மறக்க முடியாதிருந்தது. ஆனால் மனாசேயை தேவன் அவருக்கு கொடுத்த போது அந்த தொல்லைகளையும் அவர் மறந்து போனார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் உங்கள் வாழ்வில் பல வேதனைகளை மறக்க முடியாதிருக்க லாம். என்னதான் இருந்தாலும் உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடந்தவர்கள் செய்த காரியங்கள், பேசிய பேச்சுக்கள் இன்னும் உங்களை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கலாம்.

வயது முதிர்ந்த ஓர் தகப்பனார் தான் சிறுவயதிலிருந்து பட்ட கஷ்டங்களை யெல்லாம் என்னிடம் பகிர்ந்து கொண்டதன் பின்பதாக எனக்கு எனது தகப்பனார் 'துக்கத்தின் மகன்' என்று தான் பெயர் வைத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் மாறி பெயரை வைத்துவிட்டார்கள் என அம் முதியவர் கண் கலங்கினார்.

அருமையானவர்களே, கலங்க வேண்டாம்; **'உங்களுக்கு ஓர் மனாசே என்ற வாசலைத் திறந்து உங்களை ஆறுதல்படுத்த தேவன் வல்லவரா யிருக்கிறார்'.** உங்கள் வேதனைகள் யாவையும் நீங்கள் மறந்து போகும்படியான ஓர் ஆறுதலை தேவன் உங்களுக்கு நிச்சயம் தருவார். நீங்கள் ஆறுதலடைந்து எல்லாத் துன்பங்களையும் மறந்து நின்மதியாக வாழ தேவன் கிருபை செய்வாராக.

தொடர்ந்தும் வாலிபர் பகுதிக்கான தொடர் வேதபாடத்திற்குள்ளாக செல்வோம். ஜெபத்தோடும் தியான உணர்வோடும் வாசியுங்கள்.

கடந்த பகுதிகளில் அம்னோனைக் குறித்த சில வேதாகம சத்தியங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். குறிப்பாக அம்னோன் தனக்குள் எழும்பிக் கொண்டிருந்த உணர்வுகளை சரியாக கையாள முடியாமல் தவித்துக் கொண்டிருந்ததையும் அவ் வேளையில் பிழையான ஆலோசனைகளை பின்பற்றினான் என்பதனையும் உங்களுக்கு தெளிவுபடுத்தியிருந்தோம். அம்னோன் யோனதாப் எனும் சிநேகிதனின் சொல்லைக் கேட்டு கெட்டுப்போனான்.

உண்மையில் அவ்வேளையில் அம்னோன் எப்படிப்பட்ட முடிவுகளை எடுத்திருக்க வேண்டும் என்பதையும் எழுதியிருந்தோம். முதலாவது அவன் தன்னைப் படைத்த கர்த்தரை நாடியிருக்க வேண்டும் என்பதனைக் குறித்து கடைசியாகப் பார்த்து முடித்தோம்.

இப்பொழுதும் அம்னோன் எடுத்திருக்க வேண்டிய இரண்டாவது நல்ல வழியைக் குறித்து சற்று விளக்குகின்றேன். கவனியுங்கள்...

## 02. தனது பெற்றோரை கேட்டிருக்க முடியும்

எமது குழந்தைப் பிராயம் தொடங்கி வாலிபப் பிராயம் வரைக்கும் (குறிப்பாக) கர்த்தர் எமக்குத் தந்த மிகப்பெரிய பாதுகாப்பு எமது பெற்றோர். பெற்றோர் பிள்ளைகளின் பாதுகாவலர்கள்; பெற்றோர் பிள்ளைகளின் வழிகாட்டிகள்; பெற்றோர் பிள்ளைகளின் நன்மைகளைத் தேடுபவர்கள்; பெற்றோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். இப்படி எழுதிக் கொண்டே போகமுடியும்...

இப்படியாக பெற்றோரைக் கொண்டிருந்த அம்னோன் தனது எண்ணங்கள், உள் உணர்வுகளைக் குறித்து பெற்றோரிடம் கதைத்திருக்க வேண்டும். இதனை வாசிக்கின்ற பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குத் தூரமானவர்களாக நீங்கள் இருக்கக்கூடாது. அது உங்களுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். சிலருக்கு சில வேளைகளில் பெற்றோரின் அரவணைப்பு சரியாகக் கிடைப் பதில்லை என்பதும் வேதனையான உண்மை தான். ஆனால் எல்லோருக்கும் எல்லா வேளைகளிலும் அப்படி நடப்பதில்லை.

பிள்ளைகளே நீங்களாகவே உங்கள் பெற்றோருக்குத் தூரமாகா திருங்கள். இதனையெல்லாம் அம்மா – அப்பாவிடம் சொல்வதா? என்று யோசிக்க வேண்டாம். நீங்கள் அவர்களோடு கலந்தாலோசிக்க பின்நிற்கும் பொழுது அம்னோனிட்கு யோனதாப் எனும் தந்திரவாதியான நண்பன் புத்தி சொல்லிக் கொடுத்ததைப் போல் உங்களுக்கும் சில தந்திரவாதிகள் அகப்படுவதனை தவிர்க்க முடியாததாக மாறிவிடும்.

பிள்ளைகளே, வாலிபர்களே சிந்தித்துப்பாருங்கள். இன்று எத்தனை இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தை தொலைத்தவர்களாக சிறைச்சாலைகளில் கைதிகளாக இருக்கின்றார்கள். எத்தனை வாலிபர்கள் போதை வஸ்துகளிற்கு அடிமைப்பட்டவர்களாக தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள். எத்தனைபேர் வாள்வெட்டு குழுக்களாகவும், திருட்டுக் கும்பல்களாகவும், காமவெறியர்களாக வும், யாராலும் அடக்க முடியாத ரவுடிகளாகவும் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

சற்று சிந்தித்துப்பார்ப்பீர்களா? இதற்கெல்லாம் காரணம் என்ன? பிழையான நண்பர்களின் தொடர்புகளும், அவர்களின் வழிகாட்டுதல்களுமே மிகப்பெரிய காரணமாக அமைகின்றன.

ஏன் வாலிப சமுதாயம் பிழையானவர்களிடம் சென்று சிக்கிக் கொள்கின்றது என்று பார்த்தால் தங்கள் தாய் – தகப்பனை மதிக்காத போதும்; தாய் தகப்பனின் உறவைவிட நண்பத்துவ உறவிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் போதும் இந்த நிலை உருவாகுகின்றது.

'நண்பேன்டா', 'ஆயிரம் இருந்தாலும் நட்பு போல் வருமா', 'நண்பனுக்காக உயிரையும் கொடுப்பேன்' போன்ற பல வசனங்களைப் பேசினாலும் பெற்ற தாய் தகப்பனை மதிக்காது; அவர்களிடம் நட்புக் கொள்ளாமல் இருப்பது உங்களை இருளிலேயே கொண்டுபோய் முடிக்கும்.

**எபேசியர் 6:1 பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளே! உங்களின் அதி முக்கிய கடமைகளில் ஒன்று பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படிவது ஆகும். நீங்கள் உங்கள் பெற்றோரை நேசித்து கீழ்ப்படியும் பொழுது நிச்சயம் உங்களுக்கு ஆசீர்வாதம் உண்டு. உங்களுக்குரிய சரியான வயது வரும் வரைக்கும் பெற்றோரை நேசித்து அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். வயது வந்த பின்பும் கூட பெற்றோரை மதித்து வாழ வேண்டும்.

அருமையான வாலிப பிள்ளைகளே! உங்கள் பெற்றோர் உங்களால் ஒரு நாளும் கண்ணீர்விடக்கூடாது. தீய நண்பர்களுடன் சேர்ந்து விடலைப்பருவத்தை இருளில் செலவழிக்க வேண்டாம். அம்னோன் மாத்திரம் தனது தாயையோ அல்லது தகப்பனையோ நாடியிருந்தால் எவ்வளவு கௌரவமாக வாழ்ந்திருக்க முடியும்.

இந்த உலகில் வாழும் மனிதர்கள் நிறைவேற்ற வேண்டும் என்று தேவன் விரும்புகின்ற நீதியான செயல்கள் தான் கர்த்தர் மோசேயின் மூலமாக அருளிய பத்து கற்பனைகள் என்று சொல்லலாம். அந்த பத்து கட்டளைகளில் ஒரு கட்டளை இவ்வாறாகச் சொல்கின்றது:

**யாத்திராகமம் 20:12 உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.**

ஆசீர்வாதத்தை உள்ளடக்கிய முதலாவது கட்டளை என இக் கட்டளையைக் கூறமுடியும். ஒவ்வொரு பிள்ளைகளும் தங்கள் பெற்றோரைக் குறித்த விடயத்தில் மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும். ஒரு போதும் அவர்களை மரியாதைக் குறைவுடன் நடத்தக்கூடாது. கர்த்தருக்குள் அவர்கள் சொல்லும் நல்ல புத்திமதிகளுக்கு முழுமனதுடன் கீழ்ப்படிய வேண்டும். பிள்ளைகளே! உங்கள் பெற்றோர் ஒரு வேளை சரியானவர்களாக இல்லாதுவிடினும் அவர்களை நீங்கள் தரக்குறைவாக நடத்தக்கூடாது. தரக்குறைவாக பேசவும்கூடாது. முதிர்வயதிலும் அவர்களை பராமரிக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

தாய் தகப்பனிற்கு தேவையான உதவிகளைச் செய்து அவர்களை நன்கு கவனித்துக் கொள்வதும் அவர்களை கனம்பண்ணுவதில் ஓர் பகுதி என்பதனை மறக்கக்கூடாது. குறிப்பாக முதிர்வயதான பெற்றோரை நாம் சரியாக பராமரிக்கும் போது நல்ல ஆசீர்வாதங்களை தேவன் நமக்குத் தந்தருளுவார்.

**நீதிமொழிகள் 6:20 என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக் கொள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே.**

சகோதர சகோதரிகளே எல்லாமே உங்களுக்குத் தெரியும் என்ற மேட்டிமையோடு நடக்காமல் பெற்றோரின் சொல் கேட்டு நடவுங்கள். இப்பகுதியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதும் போது திரும்ப திரும்ப நான் சொல்லும் காரியம்: '**பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குத் தூரமாகாதிருங்கள்**'.

**நீதிமொழிகள் 23:22 உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயதுசென்றவளாகும்போது அவளை அசட்டை பண்ணாதே.**

தாய் – தகப்பன் உங்களுடன் கதைப்பதற்கும், உங்களை கேள்விகள் கேட்டு சீர்படுத்துவதற்கும் விட்டுக்கொடுங்கள். 'நீங்கள் எனக்கொன்றும் சொல்லத்தேவையில்லை' என்று கூறி அவர்களை நோகடிக்காதிருங்கள். தாய் தகப்பனிற்கு அடங்காத பிள்ளைகள் என்ற பெயரை எடுக்காதிருங்கள். ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் முன்பதாக உங்கள் அப்பா, அம்மா தலைகுனிந்து நிற்கிற அளவிற்கு உங்கள் செயற்பாடுகள் அமையாதிருக்கட்டும்.

சில பிள்ளைகள் தங்கள் பிரச்சினைகளை பெற்றோரோடு கதைக்க மாட்டார்கள். இன்னும் சில பிள்ளைகள் அதைக் குறித்து கதைப்பார்கள். பெற்றோரை ஆலோசனை கேட்பார்கள். ஆனால் அவர்கள் சொல்லும் நல்ல ஆலோசனைகள் தாங்கள் எதிர்பார்ப்பதற்கு மாறாக இருந்தால் தங்கள் முடிவை மாற்றிக் கொள்ளமாட்டார்கள். பெற்றோரின் ஆலோசனையை புறந்தள்ளி நடப்பார்கள். உதாரணமாக வேதாகமத்தில் இருந்து ஒரு மனிதனை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

வாலிப வயதில் சிம்சோன் திம்னாத் எனும் இடத்திற்கு பிரயாணமாகச் சென்றான். பிரயாணம் சென்றவர் பிரயாணக் காரியங்களை முடித்துக் கொண்டு வீடு திரும்பியிருக்கலாம். ஆனால் அவர் அங்கு ஒரு பெண்ணைக் கண்டார். அப்பெண் அவரது பார்வைக்கு இனிமையாகத் தோன்ற என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தார். ஆனால் மறுகணம் தன்னை சுதாகரித்துக் கொண்டு தனது ஆசையைக் குறித்து தனது பெற்றோருடன் அளவளாவினார்.

**நியாயாதிபதிகள் 14:1-2 (1.) சிம்சோன் திம்னாத்துக்குப் போய், திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டு, 2. திரும்ப வந்து, தன் தாயையும் தகப்பனையும் நோக்கி: திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டேன்; அவளை எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்.**

பெலிஸ்தியப் பெண்ணை விரும்பிய சிம்சோன் அவளைத் திருமணம் செய்து கொள்ள வாஞ்சித்தார். என்ன செய்வதென்று அவர் தனது தாய் தகப்பனைக் கேட்ட போது அவர்கள் அதற்கு இணங்கவில்லை. ஏன் தாங்கள் விரும்பவில்லை என்ற சரியான காரணத்தையும் சிம்சோனுக்குச் சொன்னார்கள்.

**நியாயாதிபதிகள் 14:3 அப்பொழுது அவன் தாயும் அவன் தகப்பனும் அவனை நோக்கி: நீ போய், விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரிடத்தில் ஒரு பெண்ணைக் கொள்ளவேண்டியதென்ன? உன் சகோதரரின் குமாரத்திகளிலும்,**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்கள் ஜனத்திலும் பெண் இல்லையா என்றார்கள். சிம்சோன் தன் தகப்பனை நோக்கி: அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்.**

அவர்கள் எவ்வளவோ சொல்லியும் சிம்சோன் தனது முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. அவளையே திருமணம் செய்து கொள்ளுவேன் என உறுதியாக நின்றான்.

முடிவில் பெற்றோர் ஒதுங்கிவிட்டனர். தனது இஷ்டப்படி தன் வாழ்வைத் தொடங்கி கடைசியில் இரு கண்களையும் பறிகொடுத்து சிறைக் கைதியாகவும், வேடிக்கைப் பொருளாகவும் மாறினார்.

ஆம் பிள்ளைகளே, எது சரி - எது பிழை என முடிவை எடுக்க முடியாத நிலை வரும் பொழுது முதலாவது உங்கள் அன்பின் தெய்வமாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உதவியைத் தேடுங்கள். அடுத்தபடியாக இரண்டாவதாக கர்த்தர் உங்களுக்கு கொடுத்த பெற்றோரைக் கேளுங்கள். நிச்சயம் உங்களுக்கு சரியான வழிநடத்துதல் கிடைக்கும். அவ் வழிநடத்துதல்கள் உங்கள் எண்ணங்களுக்கு ஒத்து வராததாக இருந்தாலும் அதற்கு கீழ்ப்படியுங்கள். ஏனெனில் அதுவே உங்களுக்கு நல்ல எதிர்காலத்தைக் கொடுக்கும்.

ஆகவே அம்னோன் தனக்குள் எழும்பிய ஆசை சரியா? தவறா? என்பதைக் குறித்து முதலாவது தன்னைப் படைத்த தேவனைக் கேட்டிருக்க வேண்டும். இரண்டாவது தனது பெற்றோரைக் கேட்டிருக்க வேண்டும் என்ற வேதாகம சத்தியங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள உதவி செய்த தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்.

---

# குறுக்கெழுத்துப் போட்டி - 117, வினா விடை - 119

## சரியான விடை எழுதியவர்கள்

**மானிப்பாய்**
01. பி.நேசமணி +
02. வி.கல்பனா

**புங்குடுதீவு**
03. த.சனுஜா
04. எஸ்.சுதாமதி

**காரைநகர்**
05. எஸ்.தர்சிகா
06. நா.கிருஷன்
07. நா.அன்னாள்
08. வி.அனுராதா

**நவக்கிரி**
09. க.கிருஷ்ணரூபா

**பாண்டவெட்டை**
10. சி.சுமித்திரா
11. சி.சிவனேஸ்வரன்

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




□ திருமதி. J.பிலிப்




தேவனுடைய கிருபையினால் 2024ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களைக் கடக்க தேவன் கிருபை செய்தார். இவ் ஆண்டு 'மீட்பின் ஆண்டாக' தேவன் எமக்கு கிரியை செய்வாராக.

சகோதரியே உன்னை பார்த்து ஒரு கேள்வி; **நீ யாரைத் தேடுகிறாய்? எப்படித் தேடுகிறாய்? ஏன் தேடுகிறாய்?** உன்னுடைய பதில் என்ன? 'நான் என் தேவனைத் தேடுகிறேன்' என்ற பதில் உன்னிடமிருந்து வரலாம். ஆனால் அவரை எப்படித் தேடுகிறாய்? அவரை நாம் தேடுவதற்கு அவர் ஒரு வழி வைத்திருக்கிறார். அவ் வழியே நீ வந்தால் மட்டுமே அவரை நீ கண்டுகொள்வாய்.

**உபாகமம் 4:29 அப்பொழுது அங்கேயிருந்து உன் தேவனாகிய கர்த்தரைத் தேடுவாய்; உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய்.**

கானானிய ஸ்திரி தன் பிள்ளையின் விடுதலைக்காய் இயேசுவை நாடி தேடி வருகின்றாள்.

**மத்தேயு 15:22-28 (22.) அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள். 23. அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**24. அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்லவென்றார். 25. அவள் வந்து: ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள். 26. அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார். 27. அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். 28. இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.**

இயேசுவை தேடி வந்தவள் முதலாவது **'தனக்கு இரங்கும்'** என்று கேட்கிறாள். இரக்கத்திற்கு பின்பு தான், தன் பிள்ளையின் வேதனையை சொல்லிக் கூப்பிட்டாள். இரக்கத்திற்காய் கூப்பிட்டாள். ஆனால் அவள் தேடி வந்த இயேசு ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அதுமட்டுமல்ல, இயேசுவிடம் இருந்த சீஷர்கள் அவளின் வேதனையைப் பொருட்படுத்தவில்லை. அவளை அனுப்பிவிடும் என்று இயேசுவிடம் வேண்டிக்கொண்டார்கள்.

அந்த ஸ்திரி இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டிருப்பாள். இயேசு தன் மகளை சுகப்படுத்துவார் என்ற நம்பிக்கையுடன் அவரை தேடி வந்த ஸ்திரிக்கு இது பெரிய ஏமாற்றமாக இருந்திருக்கலாம். ஆனாலும் அவள் அவரை விடாது பற்றி நின்றாள். பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்கு போடுகிறது நல்லதல்ல என்றும் இயேசு கூறினார். அப்பொழுது கூட அவள் தன் விசுவாசத்தைவிட்டு சிறிதும் விலகவில்லை. மிகுந்த தாழ்மையுடன் மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமானின் மேசையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். இதன் மூலம் அவள் இயேசுவைத் தன் எஜமானாக கொண்டாள். அவரிடத்திலிருந்து தனக்கு இரக்கம் கிடைக்கும் என்றும் விசுவாசித்தாள். இயேசு கூறிய வார்த்தைகளைக் கேட்டு அவள் பின்வாங்கவும் இல்லை, மனந்தளர்ந்து போகவுமில்லை. இயேசு தனக்கு உதவி செய்வார் என்ற எண்ணத்துடன் தன்னை தாழ்த்துகின்றாள். நான் பிள்ளையல்ல, நான் நாய்க்குட்டி தான் எனக்கூறினாள். **அப்பெண்ணின் தாழ்மை, அசைக்க முடியாத விசுவாசத்தைக் கண்ட இயேசு ஸ்திரியே உன் விசுவாசம் பெரிது நீ விசுவாசிக்கிறபடியே உனக்கு ஆகக்கடவது என்றார்.**

சகோதரியே இந்த தாழ்மை நம்மிடத்தில் காணப்பட வேண்டும். ஏனெனில் தேவன் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார். அதுமட்டுமல்ல, வேறு எங்கும் செல்லாது இயேசுவின் பாதத்தில் வந்து பணிகின்றாள். சீடர்களிடம் இருந்து எதிர்ப்பு வந்தது, ஆனால் அவள் தன் விசுவாசத்தைவிடவே இல்லை. ஆகவேதான் இயேசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைப் பார்த்து **'உன் விசுவாசம் பெரியது'** என்றார்.

சகோதரியே யார் உன்னை தடுத்தாலும் இயேசுவின் பாதத்தை மட்டும் முழு உள்ளத்தோடும், முழு ஆத்துமாவோடும் தேடி வருவாயானால் கானானிய ஸ்திரிக்கு உதவி செய்த தேவன் உனக்கும் உதவி செய்வார். எப்போது?

1. இயேசுவை மட்டும் தேடுவாயானால்
2. அவருடைய இரக்கத்தை நாடுவாயானால்
3. தாழ்மைப்படுவாயானால்
4. விசுவாசத்தை விட்டுவிடாதிருப்பாயானால்
5. அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவா யானால்

அப்போது தேவனுடைய மகிமையை உன் கண்கள் காணும்.

**சங்கீதம் 40:16 உம்மைத் தேடுகிற அனைவரும் உமக்குள் மகிழ்ந்து சந்தோஷப் படுவார்களாக.**



# குறுக்கெழுத்துப் போட்டி - 117

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

02. யோசேப்பாசெபெத் (2சாமுவேல் 23:8)
05. எலெயாசார் (2சாமுவேல் 23:10)
06. சேத்தூர் (எண்ணாகமம் 13:13)
11. ஏனோக்கு (எபிரெயர் 11:5)
12. சிம்ரி (1இராஜாக்கள் 16:18)

**வலமிருந்து இடமாக**

03. தெமேத்திரியு (அப்போஸ். 19:24)
07. சகாயம் (ஏசாயா 41:10)
09. அம்மெதாத்தா (எஸ்தர் 3:10)
12. சித்தீம் (ஆதியாகமம் 14:10)
13. சன்பல்லாத் (நெகேமியா 2:19)

**மேலிருந்து கீழாக**

01. கூசான்ரிஷதாயீம் (நியாயா 3:8)
04. யோகெபேத் (எண்ணாகமம் 26:59)
08. சாலொமோன் (1இராஜாக்கள் 10:27)

**கீழிருந்து மேலாக**

10. தானியேல் (தானியேல் 12:7)
13. சம்சூமியர் (உபாகமம் 2:20)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## இராபர்ட் சிங்களேயர்
## 1883 - 1946

### செயல்பாடுகள்

ஸ்காட்லாந்து நாடு. அநேக மிஷனெரிகளை இவ்வுலகத்திற்கு வழங்கியுள்ளது. அவர்களில் ஒருவர் தான் சிங்களேயர். தந்தை ஒரு கல்தச்சர். இவருடைய குடும்பம் இறைப்பற்றுடன் வாழ்ந்து வந்த நல்லதொரு குடும்பம்.

இராபர்ட் இளைஞனாக இருக்கும் போது தந்தை காலமாகிவிட்டார். எனவே 14 வயது முதல் 17 வயது வரை கொல்லப்பணி செய்து தனது குடும்பத்தை காப்பாற்றும் பொறுப்பான பணிக்கு தள்ளப்பட்டார். கொல்லப் பணி செய்யும் போதே ஆலய காரியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இரண்டு ஆண்டுகள் வேதபாட கல்வி நிலையத்தில் கல்வி கற்றார்.

ஆண்டவரின் அழைப்பை உணர்ந்த இவர், இந்தியாவில் பணியாற்றும் வாய்ப்பை நாடினார். இந்திய மக்களின் மீது ஆழ்ந்த அன்பு கொண்டார். 1909ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் நாகர்கோவில் என்ற பகுதியில் ஊழியத்தை ஆரம்பித்தார்.

1910இல் எலிசபெத் சிமித் அம்மையாரை மணந்த இவர், 1919இல் மார்த்தாண்டம் என்ற பகுதியில் தலைமைப் பொறுப்பை ஏற்றார். எல்.எம்.எஸ் ஊழியத்தின் மூலம் மாபெரும் திட்டங்களைச் செயல்படுத்தினார். ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தையல் கூடங்களும், ஆசிரியர் பயிற்சி பள்ளிகளையும் ஆரம்பித்தார். 1932இல் மாணவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கி பயில விடுதி ஒன்றையும் கட்டினார். கிறிஸ்தவ மக்களுக்காக கல்லறைத் தோட்டம் ஒன்றையும் ஏற்படுத்தினார்.

இராபர்ட் சிங்களேயர் ஓர் சிறந்த சிற்பி. கலையில் அதிக ஈடுபாடு கொண்டவர். 1924 – 1933 ஆண்டுகளில் அவரால் கட்டப்பட்ட எழில் நிறைந்த மார்த்தாண்டம் ஆலயமே இதற்கு சான்றாகும். மக்களின் நண்பராகவும், அவர்களின் ஆவிக்குரிய தகப்பனாகவும் விளங்கிய சிங்களேயர் தேவன் தனக்கு கொடுத்த திட்டத்தை சீரும் சிறப்புடனும் செய்து முடித்தார்.

**அன்பரே! உங்கள் வாழ்வுக்குப் பின்னும் பேசும்படியான செயல்களை செய்கிறீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: உலகப் பொருட்கள் நம்மிடமிருந்து எடுக்கப்படும்வரை நாம் அவைகளோடு ஒட்டிக்கொண்டிருக்கிறோம் என்பது தெரியாது. — அகஸ்டின**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மே 15**

# ஜான் பிளெச்சர்
## 1729 - 1785

## மன்னிப்பு தருவார் இயேசு



ஜெனிவாவுக்கு அருகில் லெமான் ஏரி என்ற அழகிய ஊர். அவ்வூரில் 1729ஆம் ஆண்டு பிறந்தார் ஜாண் பிளெச்சர். சிறுவயது முதலே மிகவும் பயபக்தியுடன் வளர்க்கப்பட்டார் அவர்.

வயது 7. அங்கும் இங்கும் ஓடி விளையாடிய சிறுவன் பிளெச்சர் ஓர் தவறு செய்துவிட்டான். அவ்வளவு தான். பாட்டி அவனை அழைத்தார். பயங்கரமாக திட்டினார். பிசாசு எல்லா துஷ்டக் குழந்தைகளையும் பிடித்துக் கொண்டு போவான் என்று உனக்குத் தெரியுமா? அவர் பாட்டி இக் கேள்வியைக் கேட்ட மாத்திரத்தில் ஓ...வென்று கதறி அழுதார். தன் தவறுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டான்.

அன்று முதல் பிளெச்சர், தவறான காரியங்களைக் கண்டால், தலைதெறிக்க ஓடிவிடுவார். அறியாமல் சில தவறுகளைச் செய்துவிட்டால் மணிக்கணக்கில் அவைகளுக்காக ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்பார். பாவத்தைக் குறித்த பயம் எப்பொழுதுமே அவர் உள்ளத்தில் இருந்தது. ஆண்டவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரோடு இருப்பதை உணரத் தவறவேயில்லை. அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்.

1757ஆம் ஆண்டு, ஆங்கில சபையின் குருவாகப் பட்டம் பெற்றார். அதுமுதல் ஜாண் வெஸ்லியின் உதவியாளரானார். பாவத்தைக் குறித்த இவரின் பிரசங்கம் பலரை திடுக்கிடச் செய்தாலும் அதனை அறிக்கையிட்டு ஆயிரக்கணக்கானோர் இரட்சிப்பை பெற்றனர். இவருடைய பிரசங்கம் அப்போஸ்தலருடைய பிரசங்கங்கள் போல அதிகாரமுள்ளதாயிருந்தது.

என்னுடைய நீதியெல்லாம் அழுக்கான கந்தையாயிருக்கிறது. நான் சீக்கிரம் புதுப்பிக்கப்படாவிட்டால் நரகமே என் நித்திய பங்கு என்று எழுதிய வார்த்தைகள் நம்மை பரிசுத்தமடையச் செய்து நித்திய ராஜ்யத்திற்கென்று நம்மை ஆயத்தப்படுத்துகிறது.

**அன்பரே! உமது பாவங்களையும் அறிக்கையிட்டு பரிசுத்தராகிவிட்டீரா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: உங்களின் ஆடைகளைத் தரித்துக் கொள்ளுங்கள். தேவனுக்கு பரிசுத்தம் என்ற பட்டத்தை அணிந்து கொள்ளுங்கள் – ஜான் பிளெச்சர்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜூலை 13**

# வினாவிடை 119

## சரியான பதில்கள்

01. இயேசு கிறிஸ்து (அப்போஸ்தலர் 10:38)

02. ஆகாஸ் ராஜா (IIநாளாகமம் 28:24-25)

03. ஆபிரகாம் (ஆதியாகமம் 22:1-12, 20:7)

04. பிலாத்து (மத்தேயு 27:24)

05. தாவீது (IIசாமுவேல் 23:2)

06. நோவா (ஆதியாகமம் 8:20)

07. யூதாஸ் (மத்தேயு 27:4)

08. சவுலும், யோனத்தானும் ( IIசாமுவேல் 1:23)

09. யோவான் 16:13, சங்கீதம் 143:10, தானியேல் 5:11-12

10. ஜனங்கள் ஓய்வுநாள் ஆசரிப்பதையும், அந்நியஸ்திரீகளை திருமணம் செய்யமாட்டோமென்று நெகேமியாவிடம் ஆணையிட்டார்கள் (நெகேமியா 10:31)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் வேதநாயகம் மகாராஜா




**நீதிமொழிகள் 28:13 தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.**

இது அநேகருக்கு பழக்கப்பட்ட வார்த்தை. சிலவேளை நாங்கள் சிந்திக்கின்றோம்: பாவத்தோடு இருக்கின்ற அநேகர் எவ்வளவோ ஆசீர்வாதமாய் இருக்கின்றார்கள். பாவம் செய்கின்ற அநேகர் சுகித்திருக்கின்றார்கள். அதை எங்களுடைய கண்களாலே காணக்கூடியதாக இருக்கின்றதே, தேவனை அறிந்தவர்கள் கூட சிலவேளை பாவம் செய்து கொண்டிருக்கலாம். அவர்களுடைய வாழ்க்கையிலே ஆசீர்வாதம் இருக்கின்றது, இப்படிப்பார்க்கின்ற போது இந்த வசனத்தைக் குறித்த ஒரு கேள்வி எழும்பலாம். ஆனால் இந்த வசனம் பெரும்பாலும் எங்களுடைய நித்திய வாழ்வைக் குறித்துப் பேசுகின்றது. அப்படியென்றால் **பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்.** உண்மைக்கு நாம் இந்தப் பூமியிலே வாழ்கின்ற வாழ்வு ஒரு கொஞ்சக்கால வாழ்வு: **நித்திய வாழ்வு தான் நிரந்தரமான வாழ்வு.** நாம் பாவத்தை மறைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கை செய்யாமல், பாவ மன்னிப்பை பெறாமல் இருக்கின்ற போது வாழ்வடையமாட்டோம். எங்களுக்கு நித்திய வாழ்வு கிடைக்காது: நித்திய மரணம் தான் கிடைக்கும்.

எனவே இந்த அறிக்கையைக் குறித்த சரியான உணர்வை நாங்கள் கொண்டிருக்கிற போது எங்களுடைய வாழ்வுக்கு இந்த உலகத்தின் ஆசீர்வாதத்தையும் கர்த்தர் தருவார். எல்லாவற்றுக்கும் மேலாய் ஒரு நித்திய வாழ்வை தேவன் எங்களுக்கு தருவார். அவர் எங்களுக்கு இரக்கம் செய்வார். அதனைத்தான் வேதம் சொல்கின்றது: இந்த வசனம் எங்களுக்குத் தெரிந்த வசனம். ஆனால் இதை நாங்கள் கொண்டிருக்கிறோமா? என்பது கேள்விக் குறியே. எனவே வேத ஆதரத்தோடு சிலருடைய வாழ்க்கையைக் குறித்து ஆராய்ந்து பார்க்கலாம். **அறிக்கை செய்து ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் அல்லது அறிக்கை செய்து வாழ்வடைந்தவர்கள் உண்டு: அது போல சரியான அறிக்கை செய்யாமல் தேவனைவிட்டுப்போனவர்களும் உண்டு.** அறிக்கை என்று பார்க்கின்ற போது **'நாங்கள் செய்த தவறை அல்லது பாவத்தை செய்த வண்ணமாகவே சொல்வது'.** அதற்காக பாவத்தை திரும்ப செய்து காட்டுவது அல்ல, பாவ அறிக்கையில் மறைத்தல் இல்லை. எதாவது ஒன்றை மறைத்து சொல்கின்றோமென்றால் அது அறிக்கை அல்ல. அது தேவனாலே ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

## 01. மனிதனுடைய பார்வையில் சிறிய பாவம்: ஆனால் மன்னிப்பை பெறத்தக்கதாக அறிக்கை செய்யப்படவில்லை

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தார்கள். ஆனால் தேவனிடமிருந்து மன்னிப்பை பெற்றுக் கொள்கின்ற ஒரு தருணத்தை அவர்கள் இழந்துவிட்டார்கள். ஆண்டவர் ஆதாமை உண்டாக்கி ஏவாளை அவனுக்கு கொடுத்து ஏதேன் தோட்டத்திலே அவர்களுக்கு சொன்னார்: **'தோட்டத்திலே இருக்கின்ற எல்லாக் கனிகளையும் புசிக்கலாம், ஆனாலும் ஒரு மரத்தைக் காண்பித்து இந்த மரத்தின் கனியை மாத்திரம் புசிக்க வேண்டாம்'.** தேவன் கொடுத்த கட்டளைக்கு மாறாய் பிசாசு வந்து என்ன செய்தான்? அவளை அவன் வஞ்சித்தான். தேவன் இந்தப் பழத்தை சாப்பிடக்கூடாது என்று சொன்னாரோ? என்று கேட்டான். ஏவாள் சொன்னாள்: 'அதை சாப்பிடவும், தொடவுங்கூடாது' என்று தேவன் சொன்னார். அதற்கு சர்ப்பம் கூறியது: 'இல்லை, நீ இதை சாப்பிடு, இதைச் சாப்பிட்டால் நீ தேவனைப் போன்று வருவாய்' **(ஆதியாகமம் 2:16, 3:1-6).** அதனைக் கேட்ட ஏவாள் அதைப் பார்த்தாள்: 'அது பார்வைக்கு இன்பமும் புசிப்புக்கு நன்றாய் இருக்கும் என்று தெரிந்து பிடுங்கி தானும் சாப்பிட்டு தன் கணவனுக்கும் கொடுத்தாள்'. ஆதாமும் பாவம் செய்தான். இந்தப் பாவத்தை தோற்றத்தின்படி நாங்கள் பார்த்தால் சாப்பிடவேண்டாம் என்பதனை சாப்பிட்டார்கள். இது பெரிய பாவமா? என்று நாங்கள் சிந்திக்கலாம். நாங்கள் சாப்பாட்டு வேளைகளிலே யாரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசமாட்டோம், சாப்பாட்டு வேளைகளில் யாரையும் அடிக்கமாட்டோம். ஏனென்றால் சாப்பாட்டு வேளை என்பது ஒரு மரியாதைக்குரிய வேளையாகவே பெரும்பாலும் கணிப்பார்கள். அத்துடன் ஒருவர் சாப்பிட்ட பின்பும் கூட சரி... சாப்பாடு தானே... ஏதோ விருப்பமாய் உண்டுவிட்டார்கள்... என்று பெரும்பாலும் மனிதர்கள் கூறுவார்கள். அது போல தேவனும் ஆதாம் ஏவாளுக்கு இந்த விடயத்தில் ஒரு சிறிய இரக்கத்தைக் காட்டியிருக்கலாம் தானே. ஏனென்றால் அதை அவர்களாய் சென்று சாப்பிடவில்லை. சத்துருதானே வஞ்சித்தான்.

இது போன்று தேவன் இரக்கம் காட்டியிருக்கலாம் என்பதற்கு இன்னொரு காரணம்: இவர்கள் தான் முதலாவது மனிதர்கள். இதற்கு முன் வேறு யாராவது மனிதர்கள் வாழ்ந்தார்களா? இவர்கள் அவர்களைப் பின்பற்றி வாழ்வதற்கு, இல்லை இவர்கள் தான் முதலாவது மனிதர்கள். முதல் மனிதன் செய்த இந்த காரியத்தை கருத்திலே எடுக்காமல்விட்டிருக்கலாம். இதனை தேவன் மன்னித்துவிட்டிருக்கலாம் தானே. கர்த்தர் பாவத்திற்கு ஒரு சிறிய இடமும் கொடுக்கமாட்டார். மனிதர்களுடைய பார்வையிலே தோற்றத்தின்படி ஒரு சாதாரண காரியம் போன்று இருக்கலாம். இது ஒரு சிறிய பெலவீனமாய், சிறிய தவறாய் இருக்கலாம். ஆனால் தேவனோ பாவத்தை பாவமாகவே பார்த்தார். எங்களுடைய தேவனுக்காக ஸ்தோத்திரம். ஐந்து ஆகமங்களையும் எழுதிய ஆசிரியர் மோசே. இந்த மோசே எப்படிப்பட்ட புத்திசாலி என்று தெரியுமா? ஒரு தடவை மலைக்குப் போய் தேவன் சொன்ன காரியத்தை அப்படியே கேட்டு வந்து ஒன்றும் பிசகாமல் எழுதுகிற கெட்டிக்காரன். ஆசரிப்புக்கூடாரம் கட்டுகின்ற முறையை கேட்டுவந்து என்ன நீளம், என்ன அகலம், என்ன உயரம், மா எவ்வளவு, எண்ணெய் எவ்வளவு, வெண்கலப்பீடம் எப்படி செய்ய வேண்டும்? சமூகத்தப்பமேசை எந்த அளவு நீளம், அகலம், அதில் தொங்குகின்ற மணி என்ன, கொழுக்கி என்ன, முத்தென்ன.... எல்லாம் அப்படியே எழுதினான். அப்படிப்பட்ட மோசேயைக் கொண்டு தான் தேவன் படைப்பை சொன்னார்.

பாவத்திற்கு இரக்கம் காண்பிக்கக்கூடாது. ஆண்டவர் ஆதாம் ஏவாளை எவ்விதம் உண்டாக்கினார்? பூமியின் மண்ணை எடுத்து மனித தோற்றத்தை உருவாக்கி, அவர்களுக்கு ஜீவ சுவாசத்தைக் கொடுத்தார். அதற்கு பிற்பாடு வந்தவர்கள் இவர்கள் மூலமாய் வந்த சந்ததிகள். தேவன் ஒன்றை சிந்தித்திருக்கலாம், என்னுடைய கரத்தாலே தான் நான் இவனை உருவாக்கினேன். இந்த விடயத்தில் இவனை மன்னித்து இவனை துரத்தாமல் விடுவோம் என நினைக்கவில்லை. ஆண்டவர் சிருஷ்டித்த சிருஷ்டிப்பிற்குள்ளேயே சிறந்த சிருஷ்டி இவன்தான். இந்த திறமான மனிதனுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருக்கலாம் தானே, இன்று பாவம் செய்த மனிதர்களைக்கூட பல கிறிஸ்தவர்கள் பார்க்கும் விதங்கள் வித்தியாசமானவைகள்.

எமக்கு நெருங்கியவர்கள் பாவம் செய்தால் அது பரவாயில்லை: ஆனால் எமக்கு பிடிக்காதவர்கள் பாவம் செய்தால் தண்டிக்கப்படவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பிள்ளை பாவம் செய்தால் காத்தர் பார்ப்பார்: இன்னொருவருடைய பிள்ளை பாவம் செய்தால் அப்படிச் செய்திருக்கக்கூடாது. என்னுடைய மனைவி பாவம் செய்தால் அது நன்மைக்காக செய்திருக்கிறார்: இன்னொரு பெண் செய்தால் அவர்களெல்லாம் ஒரு பெண்ணா? எத்தனைவிதமான பிரதி பலிப்புக்கள். **தேவன் எதிர்பார்க்கும் கண்ணோட்டத்துடன் பார்க்கத்தெரியாதவர்கள் வீழ்ந்து போனவர்கள். அல்லது வீழ்வதற்கு ஆயத்தமாய் இருப்பவர்கள்.** ஆண்டவர் விசேஷித்தது, சிறந்தது எனப்பார்ப்பதில்லை. பாவம் என்றால் அதைப் பாவமாகவே பார்க்கின்றார்.

ஏதேன் தோட்டத்திற்கு வந்த ஆண்டவர் இவர்களைக் காணாமல் கேட்கின்றார்: 'ஆதாமே நீ எங்கே இருக்கின்றாய்?' வழமையாக சேர்ந்து உலாவுபவர்களை இன்று காணவில்லை. அவர்கள் அந்த விருட்சங்களுக்குள்ளே மறைந்து இருந்தார்கள். ஆதாம் ஆண்டவருக்கு கூறுகின்ற பதில்: 'தேவரீருடைய சத்தத்தைக் கேட்டு, நான் நிர்வாணியாய் இருப்பதினால் பயந்து ஒளித்துக் கொண்டேன்'. அப்பொழுது ஆண்டவர் கேட்கின்றார்: 'நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்?, நான் புசிக்கவேண்டாம் என்று விலக்கின விருட்சத்தின் கனியை புசித்தாயோ?' இங்கு தான் பாவ அறிக்கைக்கான சந்தர்ப்பம் கொடுக்கப்படுகின்றது. அறிக்கை செய்யப்பட வேண்டிய நேரம் இது தான். **'ஆண்டவரே நீர் புசிக்க வேண்டாம் என்று விலக்கின விருட்சத்தின் கனியை நான் புசித்து, நீர் கூறிய கட்டளையை மீறி பாவம் செய்துவிட்டேன், என்னை மன்னியும்'.** இந்த ஒரு வசனம் அந்த நேரத்திலே ஆதாமாலே சொல்லப்படவில்லை.

அடுத்த சந்தர்ப்பம் கொடுக்கின்றார்: 'நீ நிர்வாணி' என்று உனக்கு அறிவித்தவன் யார்? அதில் கூட அவன் சொல்லவில்லை, நீர் சாப்பிடக்கூடாது என்று சொன்ன கனியை சாப்பிட்டுவிட்டேன், என்னை மன்னியும். ஆனால் ஆதாம் என்ன சொன்னான்? **'தேவரீர் தந்த ஸ்திரியானவள் அவ் விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நான் புசித்தேன்'** என்றான். இது உண்மைதான். ஆனால் தான் பாவம் செய்துவிட்டேன் என்பதை காண்பிக்காத உண்மை. தான் வீழ்ந்து போனேன் என்பதை மறைக்கும் உண்மை. ஏவாள் சொன்னதும் உண்மை தான்: **'சர்ப்பம் என்னை வஞ்சித்தது'** தான் வீழ்ந்து போனதை ஏற்றுக்கொள்ளாமல் சொல்லும் உண்மை இது. ஆண்டவர் ஸ்திரீயிடம் கேட்ட போது அவள் சொன்னாள்: **'சர்ப்பம் என்னை வஞ்சித்தது'** இங்கே நாம் பார்ப்பது இங்கு நடந்த அந்த பாவத்திற்குரிய பாவ அறிக்கையை ஆதாமோ, ஏவாளோ செய்யவில்லை. எங்களுடைய பார்வையின்படி ஒரு சிறிய பாவம் தான். ஆனால் அறிக்கை சரியானதாக அமையவில்லை. இந்தக் காரியம் இல்லாததினாலே அந்தகாரம் அவர்களையும் சூழ்ந்தது. அவர்களுக்கு பின்பதாக வந்த எல்லா மனுக்குலத்தையும் அந்த பாவம் சூழ்ந்தது. முழு உலகத்தையும் அந்தகாரப்படுத்திவிட்டது. **(ஆதியாகமம் 3:8-13).**

**இன்னொருவிடயம் இங்கே கவனிக்கப்பட வேண்டும்: இந்த சிறிய பாவமே இந்த முழு உலகத்தையும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கறைபடுத்துமென்றால் தேவனுடைய கட்டளையைப் பெற்ற கிறிஸ்தவர்கள் செய்யும் பாவம் குடும்பங்களை, சபைகளை, தேசங்களைக் கறை படுத்தும்.**

நாம் ஒருவர் பாவம் செய்து அந்தப் பாவத்திற்காய் சரியாய் மன்னிப்பு கேட்காதவிடத்து எங்களை நம்பி எதுவெல்லாம் இருக்கின்றதோ அதுவெல்லாம் கறைபடக்கூடியதாய் போய்விடும். ஒரு சிறிய பழத்தை சாப்பிட்ட பாவமே பெரிய அந்தகாரத்தைக் கொண்டுவந்ததென்றால் நாங்கள் தெரிந்து செய்கின்ற பாவங்கள் எத்தனை? என்னாலே ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறது, ஜெபிக்க முடியாமல் இருக்கிறது, வேதம் வாசிக்க முடியாமல் இருக்கிறது, அந்தகாரம் என்னை சூழ்ந்து கொள்வது போல் இருக்கின்றது, குடும்பத்தில் சமாதானம் இல்லை, எனக்குள்ளே ஒரே குழப்பம்... என எண்ணலாம். செய்த பாவத்திற்கு சரியான அறிக்கை செய்யாதுவிட்டால் எம்மை அந்தகாரம் சூழ்ந்துவிடும். சரியான ஒரு அறிக்கையை செய்யவில்லை, மன்னிப்பு பெறவில்லை, இதனால் தேவ பிரசன்னத்தை ஆதாம் இழந்தான். ஏதேனை விட்டு அவன் வெளியேற்றப்பட்டான். எங்களுடைய வாழ்வில் சில இழப்புகளுக்குக் காரணம்: செய்த பாவத்தை சரியாய் அறிக்கை செய்யாமலிருப்பதே.

உதாரணமாக: நாம் ஒருவருடைய ஒரு பொருளை களவெடுத்து அதை யாருக்கும் தெரியாமல் விற்பனை செய்துவிட்டால் சில நாட்கள்... சில காலங்கள்... கடந்து செல்கின்றது. உள்ளத்திலே ஒரு குற்ற உணர்வு வருகின்றது. அந்த நபர் பாவம், நான் அவருக்கு இப்படிச் செய்துவிட்டேனே என்று துக்கப்பட்டு அந்த நபரிடம் சென்று: சகோதரனே, உங்களை நான் நோகப்படுத்திவிட்டேன் என்று சொன்னால் அப்பொழுது அவர் சிந்திப்பார்: இவர் எப்படி, எப்பொழுது என்னை நோகப் படுத்தினார்? ஏனென்றால் இன்னும் யார் அவருடைய பொருளை களவெடுத்தது என்று அவருக்குத் தெரியாது. பின்பும் எனக்கு நின்மதி இல்லை, எனவே அடுத்த நாள் அவரிடம் சென்று: உங்களுக்கு சொற்ப செலவு வைத்துவிட்டேன் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், இப்படி கூறிய பின்பு அந்த நபர்: இவர் எனக்கு என்ன செலவு வைத்துவிட்டார்? என்று சிந்திப்பார். இப்படி மாறி மாறி ஏதாவது ஒன்றை சொல்லக் கூடாது. இப்படி நாம் சொல்வதினாலே நான் செய்த இந்தப் பாவம் மன்னிக்கப்படமாட்டாது. அறிக்கை என்று சொல்கின்ற போது: **'நான் என்ன சொல்ல வேண்டுமென்றால், சகோதரனே நான் உங்களுடைய இந்தப் பொருளை நீங்கள் இல்லாத நேரத்தில் களவெடுத்து விற்பனை செய்துவிட்டேன், பாவம் செய்துவிட்டேன் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்'** இதுதான் உண்மையான அறிக்கை. இல்லையென்றால் நீங்கள் சுற்றி சுற்றி என்ன கூறினாலும் அது மன்னிக்கப்படமாட்டாது.

வேதாகமத்தின் அடிப்படையில் நாம் பார்க்கும் போது, நாம் என்ன காரியத்தை செய்தோமோ? என்ன பாவத்தை செய்தோமோ? அது அப்படியே சொல்லப்பட வேண்டும். அதற்குப் பதிலாக வேறு என்ன சொன்னாலும், அது அறிக்கை அல்ல. நாம் ஒருவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரோதமாய் பாவம் செய்தால் அந்த நபரிடம் சென்று நாம் அவருக்கு விரோதமாய் செய்த அந்த காரியத்தை சொல்லி அதை சரிப்படுத்த வேண்டும், சீர் செய்ய வேண்டும். அவரிடத்திலிருந்து அந்த தவறுக்கான மன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் நாம் சிலவேளைகளில் சிந்திக்கின் றோம்: நாம் அவருக்கு விரோதமாக செய்த காரியத்தை ஈடுசெய்யும்படியாக அவருடைய வீட்டிற்குச் சென்று அவரு டன் உறவாடிவிட்டு வந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று எண்ணுகிறோம். இது அறிக்கை அல்ல, இவையெல்லாம் எங்களுடைய பாவத்தை நாங்கள் மறைக்கின்ற செயல். **அறிக்கையென் றால் செய்த பாவத்தை அப்படியே சொல்வது.** ஆதாமும் ஏவாளும் செய்ததை சொல்வதற்கு பதிலாய் சுற்றி சுற்றி ஒவ்வொரு கதையைக் கூறினார் கள். அதை சரியாக அவர்கள் அறிக்கை செய்யவில்லை. எங்கள் பார்வையிலே அது ஒரு சிறிய பாவம். அவர்கள் மன்னிப்பு பெற்றுக்கொள்ளும் சந்தர்ப் பத்தை இழந்தார்கள். பிரியமானவர் களே நீங்கள் ஏதாவது பாவம் செய்தால் அதை நேரே சொல்லுங்கள். சிலவேளை அது உங்கள் குடும்ப அங்கத்தவர் களுக்கு விரோதமாய் நீங்கள் செய்த காரியமாயிருக்கலாம். அதனை அவர் களிடம் அப்படியே சொல்லுங்கள்.

பாவ அறிக்கையில் சரியாய் தேவன் எதிர்பார்க்கின்ற அந்த சொல் லைக் கேளாமல் ஆயிரம் வார்த்தை களைச் சொன்னாலும் அது கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுவது கஷ்டம். ஒரு உணர்வு வந்து அறிக்கை செய்யப்படா விட்டால் அது வேத ஆதாரத்தின்படி மன்னிக்கப்படுவது கடினம்.

நீங்கள் ஏதாவது ஒரு பாவம் செய்திருந்தால் யாருக்கு விரோதமாயா வது செய்திருந்தால் அந்த நபரிடம் சென்று அதை சொல்லி அறிக்கை செய்ய வேண்டும். இல்லையென்றால் வேத ஆதரத்தின்படி அது அறிக்கை யல்ல. அறிக்கை செய்யப்படாவிட்டால் மன்னிப்பு இல்லை.

நாங்கள் பிறந்தது முதல் தேவனை அறியும் வரைக்கும் எத்த னையோ பாவங்கள் செய்திருக்கலாம். இரட்சிக்கப்படுகின்ற நாளிலே தேவனி டத்திலே நான் ஒரு பாவி என்று சொன்ன போது கர்த்தர் அதை ஏற்று மன்னிப்பை தந்தார். தேவனை அறிந்த பிற்பாடு தேவனுக்குள் வாழ்கின்ற நாம் தேவனைத் தெரிந்தவர்கள். அவரால் உருவாக்கப் பட்ட முதல் மனிதர்கள் தேவனோடு உலா வருகின்றவர்கள் அவர்கள் அறிக்கை செய்யாமல்விட்டதினாலே அவர்களை மன்னிக்கவில்லை. இரட்சிக் கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும். சரியான அறிக்கையை நாம் செய்யாவிட்டால் எங்களுக்கு மன்னிப்பு கிடைக்கும் என்பது சந்தேகமே. எனவே எந்தக் காரியம், எங்கே தவறவிட்டோம் என்பதை சொல்லி அறிக்கை செய்ய வேண்டும். இந்த இரண்டு மனிதர்களும் தேவன் விரும்பின அந்த அறிக்கையை செய்யவில்லை. ஆயிரம் வார்த்தை சொல்லி தேவன் விரும்புகின்ற ஒரு வார்த்தை சொல்லாவிட்டால் மன்னிப் பில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. பார்வைக்கு பெரிய பாவம்: ஆனால்மன்னிப்பை பெறத்தக்கதாக இவன் அறிக்கை செய்தான்

வேதாகமத்தில் எல்லோருக்கும் தெரிந்த ஒரு கதாபாத்திரம் தாவீது. இந்த தாவீதை ஆதாம் – ஏவாள் செய்த பாவத்தோடு ஒப்பிடும் போது ஆதாம் – ஏவாள் செய்த பாவம் ஒரு சிறிய பாவம். சிறிய காரியத்தில் தவறிய ஆதாம் – ஏவாளுக்கு மன்னிப்பு கிடைக்கவில்லை. ஆனால் பெரிய காரியங்களிலே தவறிய தாவீதுக்கோ என்ன நடந்தது? இந்த தாவீது தான் நினைத்து, தான் திட்டம் போட்டு பாவத்திலே விழுந்தான். தாவீது செய்த பாவம் என்ன? உரியாவினுடைய மனைவியை தன் மனைவியாய் எடுத்தது, அடுத்தது உரியாவைக் கொலை செய்தது. இந்தக் காரியங்களை செய்த பிற்பாடு தாவீது அமைதியாய் இருந்துவிட்டான். இதை நாம் பார்க்கும் போது இது பார்வைக்கு பெரிய பாவம். ஆனால் மன்னிப்பை பெறத்தக்கதாக இவன் அறிக்கை செய்தான்.

**11சாமுவேல் 11:27 துக்க நாள் சென்றபின்பு, தாவீது அவளை அழைத்தனுப்பி, தன் வீட்டிலே சேர்த்துக் கொண்டான்; அவள் அவனுக்கு மனைவியாகி, அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். தாவீது செய்த இந்தக் காரியம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது.**

இவன் செய்த இந்தக் காரியம் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பாயிருந்தது. இவன் தான் செய்த பாவம் யாருக்கும் தெரியாது என நினைத்தான். பத்சேபாளை தனக்கு மனைவியாக்கி யுத்தத்திற்கு சென்றிருந்த அவளுடைய கணவனாகிய உரியாவை அழைத்து, உரியா தாவீதினிடம் வந்த போது:

**11சாமுவேல் 11:7-9 (7.) உரியா அவனிடத்தில் வந்தபோது, தாவீது அவனைப் பார்த்து: யோவாப் சுகமாயிருக்கிறானா, ஜனங்கள் சுகமாயிருக்கிறார்களா, யுத்தத்தின் செய்தி நற்செய்தியா என்று விசாரித்தான். 8. பின்பு தாவீது உரியாவை நோக்கி: நீ உன் வீட்டிற்குப் போய், பாதசுத்தி செய் என்றான். உரியா ராஜ அரமனையிலிருந்து புறப்பட்டபோது, ராஜாவினிடத்திலிருந்து உச்சிதமான பதார்த்தங்கள் அவன் பின்னாலே அனுப்பப்பட்டது. 9. ஆனாலும் உரியா தன் வீட்டுக்குப் போகாமல், ராஜ அரமனையின் வாசலிலே தன் ஆண்டவனுடைய எல்லாச் சேவகரோடுங்கூடப் படுத்துக்கொண்டிருந்தான்.**

அவன் இவ்விதமான காரியங்களைச் சொல்லி தான் செய்த பாவம் பிடிபடக்கூடாது என்பதற்காய் உச்சிதமான பதார்த்தங்களை அவன் பின்னாலே அனுப்பி வீட்டுக்குச் செல் என்று சொல்கின்றான். அவனோ வீட்டுக்குச் செல்ல மறுக்கின்றான்.

**11சாமுவேல் 11:11 உரியா தாவீதை நோக்கி: பெட்டியும் இஸ்ரவேலும் யூதாவும் கூடாரங்களிலே தங்கி, என் ஆண்டவனாகிய யோவாபும் என் ஆண்டவனின் சேவகரும் வெளியிலே பாளயமிறங்கியிருக்கையில், நான் புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் என்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனைவியோடே சயனிக்கிறதற்கும், என் வீட்டிற்குள் பிரவேசிப்பேனா? நான் அப்படிச் செய்கிறதில்லை என்று உம்முடையபேரிலும் உம்முடைய ஆத்துமாவின்பேரிலும் ஆணையிட்டுச் சொல்கிறேன் என்றான்.**

நாமும் சிலவேளைகளில் எங்களுடைய பாவங்களை மறைப்பதற்காக மற்றவர்களுக்கு உச்சிதமான பொருட்களைக் கொடுப்போம். நாங்கள் கொடுக்கும் பொருட்கள் பாவத்தை மன்னிக்காது. பணம் பாவத்தை மன்னிக்காது. சிலர் ஒரு சாட்சி சொன்னால், எங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிடும் என்று சிந்திக்கிறார்கள். செய்த பாவத்தை சொல்லாமல் மற்றவர்கள் நான் பாவத்தை அறிக்கை செய்துவிட்டேன் என்பதனை பார்க்கட்டும் என்பதற்காக சொல்வார்கள். சிலர் தாங்கள் இன்னொரு நன்மையைப் பெறவேண்டும் என்பதற்காக ஒரு பாவத்தை வைத்துக்கொண்டு வேறொரு பாவத்தை அறிக்கை செய்வார்கள். ஆனால் அவர்களுடைய வாழ்க்கைக்குள் இருக்கின்றது இன்னொரு பாவம். அந்தப் பாவத்தை மறைப்பதற்காக இன்னொரு பாவத்தை சொல்வார்கள். தாவீது ராஜா உரியாவை வீட்டிற்கு செல்லும்படி சொல்கின்றான். உரியா அப்படியே வீட்டிற்கு செல்லவில்லை. இதையறிந்த தாவீது சொல்கின்றான்:

**11சாமுவேல் 11:12 அப்பொழுது தாவீது உரியாவை நோக்கி: இன்றைக்கும் நீ இங்கேயிரு. நாளைக்கு உன்னை அனுப்பிவிடுவேன் என்றான்; அப்படியே உரியா அன்றும் மறுநாளும் எருசலேமிலே இருந்தான்.**

இந்த வசனம் ஒரு வஞ்சனை நிறைந்த வசனம். கடிதம் ஒன்றை எழுதியனுப்புகின்றான். யோவாப்பிடம் செய்தி செல்கின்றது. இந்தக் கடிதத்தோடு வரும் உரியாவை எங்கு யுத்தம் மும்முரமாய் நடக்கின்றதோ அங்கே அவனை நிறுத்தி சண்டையின் போது நீங்கள் எல்லோரும் பின்வாங்குங்கள். உரியா கடிதம் கொடுக்கும்படியாய் கொண்டு செல்கின்றான். நாங்கள் என்றால், செல்லும் வழியில் வைத்தே கடிதத்தை பிரித்துப் பார்த்திருப்போம். இதில் என்னைக் கொலை செய்யும்படி எழுதியிருக்கின்றது, நாம் எங்கேயாவது தப்பிச் சென்றுவிடலாம் என்று சொல்லி தப்பிச் சென்றிருப்போம்.

ஆனால் இந்த உரியா அவன் நீதிமான், அவன் நேர்மையானவன், உண்மையுள்ள ஒரு உக்கிராணக்காரன், கொடுத்ததை நம்பிக்கைத் துரோகம் செய்யாமல் காத்துக்கொண்டவன். தன் உயிர் போகின்ற காரியத்திலும் அவன் உண்மையுள்ளவனாய் இருந்தான். இதன்படியே யோவாப் மும்முரமாய் யுத்தம் நடக்கின்ற இடத்திலே உரியாவை நிறுத்தினான். உரியா இறந்தான். ஆதாம் ஏவாள் செய்த பாவத்தோடு இதை ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்கள் செய்த பாவம் எத்தனையோ மடங்கு சிறிய பாவம். இந்த தாவீது ராஜாக்கள் யுத்தத்திற்கு செல்ல வேண்டிய சந்தர்ப்பத்தில் உப்பரிகையில் நடந்தது ஒரு பாவம். அடுத்து அந்தப் பெண்ணைப் பார்த்து இச்சித்தது பாவம், வீட்டு அழைத்தது பாவம், அவளோடு தகாத வகையில் நடந்தது பாவம், அதற்காக வஞ்சனையாய் உரியாவை அழைத்தது பாவம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நீதிமானை கொலை செய்ய வஞ்சனையாய் திட்டம் தீட்டியது பாவம், அவனைக் கொலை செய்தது பாவம். இவ்வளவு பாவங்களை செய்த தாவீதுக்கு மன்னிப்பு கிடைத்தது. அது எவ்விதம்? தாவீது தான் செய்த இந்தக் காரியம் யாருக்கும் தெரியாது என சிந்தித்தான்.

ஆனால் தேவன் தாவீதுடைய பாவத்தை உணர்த்தும்படியாய் நாத்தானை அனுப்புகின்றார். நாத்தான் தாவீதிடமாய் சென்று ஒரு சம்பவத்தைக் கூறி அதற்கூடாகத் தாவீதின் பாவத்தை சுட்டிக்காட்டுகிறான். **11சாமுவேல் 12:1-14 (1.) கர்த்தர் நாத்தானைத் தாவீதினிடத்தில் அனுப்பினார்; இவன் அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள்; ஒருவன் ஐசுவரியவான், மற்றவன் தரித்திரன். 2. ஐசுவரியவானுக்கு ஆடுமாடுகள் வெகு திரளாயிருந்தது. 3. தரித்திரனுக்கோ தான் கொண்டு வளர்த்த ஒரே ஒரு சின்ன ஆட்டுக்குட்டியைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது; அது அவனோடும் அவன் பிள்ளைகளோடுங் கூட இருந்து வளர்ந்து, அவன் வாயின் அப்பத்தைத் தின்று, அவன் பாத்திரத்திலே குடித்து, அவன் மடியிலே படுத்துக் கொண்டு, அவனுக்கு ஒரு மகளைப் போல இருந்தது. 4. அந்த ஐசுவரியவானிடத்தில் வழிப்போக்கன் ஒருவன் வந்தான்; அவன் தன்னிடத்தில் வந்த வழிப்போக்கனுக்குச் சமையல் பண்ணுவிக்க, தன்னுடைய ஆடுமாடுகளில் ஒன்றைப் பிடிக்க மனதில்லாமல், அந்தத் தரித்திரனுடைய ஆட்டுக் குட்டியைப் பிடித்து, அதைத் தன்னிடத்தில்வந்த மனுஷனுக்குச் சமையல் பண்ணுவித்தான் என்றான். 5. அப்பொழுது தாவீது: அந்த மனுஷன்மேல் மிகவும் கோபம் மூண்டவனாகி, நாத்தானைப் பார்த்து: இந்தக் காரியத்தைச் செய்த மனுஷன் மரணத்துக்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன். 6. அவன் இரக்கமற்றவனாயிருந்து, இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனை திரும்பச் செலுத்தவேண்டும் என்றான்.** தாவீது இதைக்கேட்ட போது இப்படிச் செய்தவன் கொலைக்கு பாத்திரவான் என்று சொன்னபோது நாத்தான் சொன்னான்: **'நீயே அந்த மனுஷன்'.** உடனே தாவீது என்ன செய்தான்: **'நான் கர்த்தருக்கு விரோத மாய் பாவம் செய்தேன்'** என்றான். பாவம் எவ்வகையானதாக இருப்பினும் பாவம் அனைத்தும் கர்த்தருக்கு விரோத மானதே. பாவங்கள் அனைத்தும் கர்த்தருக்கு விரோதமானது.

கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ ஊழியம் செய்பவர்கள் (ஆண், பெண்) கூட பிரிவினை, மார்க்க பேதங்கள், வஞ்சனை, மற்றவர்களைக் குறித்து நிந்தனை கூறுவது, சிநேகமாயிருக் கும் நண்பர்களைப் பிரித்துவிடுவது, அவர்களுக்கு கனம் கொடுக்க வேண்டாம் என்பதை மறைமுகமாய் செயற்படுத்துவது, குற்றமற்றவர்களை குற்றம் செய்தவர்கள் போல விசுவாசி களுக்கு காண்பிப்பது, குற்றம் செய்யாதவர்களை பரிசுத்தவான்கள் போல் காண்பிப்பது, ஒழுங்குக்கேடு செய்வது, அதிகார துஸ்பிரயோகம் செய்வது, நன்மைக்குப் பேசுவது போன்று கோள் சொல்வது, தொடர்ச்சியாக பொய் பேசிக்கொண்டிருப்பது, பகைமையை உண்டாக்குவது, சகோதரர்களைப் பகைப்பது போன்ற பல பாவங்களைச் செய்வார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் என்ன சொல்வார்கள்: இதெல்லாம் தேவனுடைய ராஜ்யத்திற்காக செய்கின்றேன், சபை வளர்ச்சிக்காக செய்கின்றேன். பாவம் செய்வதனால் தேவனுடைய ராஜ்யம் வளருமென்றால் கிறிஸ்து மரித்தது வீணாகுமே.

**ரோமர் 6:1-2 (1.) ஆகையால் என்னசொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமோ? கூடாதே. 2. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?**

'எனக்காக நீங்கள் பாவம் செய்யுங்கள் என்று தேவன் சொல்லவேயில்லை' **தாவீது ராஜாவுக்கு நன்றாகத் தெரியும்: பாவம் அனைத்தும் தேவனுக்கு விரோதமானதென.** அவனிடம் இருந்த அழகு இதுதான், அவனிடமிருந்த நல்ல குணம் இது தான். அவன் இதற்கு ஒரு சாட்டும் கூறவில்லை. செய்த பாவம் பல பாவம். ஆனால் அதை ஒரு வார்த்தையில் அவன் அறிக்கை செய்கிறான். ஆதாம் செய்த பாவம் ஒரு பாவம்: ஆனால் அவன் கூறிய வார்த்தைகள் அனேகம். அப்படிச் சொல்லியும் அது மன்னிக்கப்படவில்லை. ஏனென்றால் அவர்களிடம் சரியான பாவ அறிக்கை இல்லை. ஆனால் தாவீதினுடைய உள்ளம் தான் செய்ததை அப்படியே ஏற்று, தான் நடப்பித்ததை அப்படியே உணர்ந்து, உணர்ச்சி நிறைந்த உள்ளத்தோடு வந்தது தான் இந்த அறிக்கை. நாங்கள் செய்த காரியத்தை பல வார்த்தைகள் சொல்லி மெழுகாமல் தேவன் எதிர்பார்க்கின்ற அந்த ஒரு காரியத்தை சொல்லி அறிக்கை செய்ய வேண்டும். இந்த அறிக்கை தான் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தாவீதுக்கு சில தண்டனைகளை தேவன் கொடுத்தார். அவனுக்கு பத்சேபாள் மூலம் பிறந்த முதலாவது குழந்தையைக் கர்த்தர் அடித்தார். இன்னும் சில காரியங்களை நாத்தான் சொன்னான். அவையெல்லாம் அப்படியே நடந்தது. ஆனாலும் இன்றைக்கு பேசப்படுகின்ற போது ராஜாக்களை குறித்து எழுதுகின்ற போது முன் உதாரணமாய் காண்பிக்கப்படுகிறவன் இந்த தாவீது. தாவீது என் இருதயத்திற்கு பிரியமானவன் என்று எழுதக்கூடியதாய் இருக்கின்றது. **'ஆதாம் விழுகைக்குரிய உதாரணம்: ஆனால் தாவீதைக் குறித்து நாம் பார்க்கும் போது அவன் விழுந்து எழுந்ததற்குரிய உதாரணம்'.** ஆதாம் தேவனிடம் கட்டளை பெற்றவன், தாவீது நியாயப்பிரமாணம் தெரிந்தவன். இருவரும் பாவம் செய்தனர். ஆனால் தாவீது மன்னிப்பு பெறத்தக்க அறிக் கையை செய்தான்.

நாங்கள் செய்த காரியங்கள் அசிங்கம் என்று சொல்லி அதை அறிக்கை செய்யாமல் இருக்கலாம். இன்னொருவருடைய வாழ்க்கையிலே நாங்கள் செய்த காரியங்கள் விளைவுகளை ஏற்படுத்தியிருக்கலாம். இவ்விதம் நாங்கள் பாவம் செய்துவிட்டு அதைக் கண்டும் காணாதது போல் இருப்போமானால் தேவனிடமிருந்து மன்னிப்பை பெறமுடியாது. தாவீது தன்மேலாய் சொல்லப்பட்ட அனைத்து காரியங்களையும் ஏற்றுக்கொண்டவனாய் சொல்கிறான்: **'நான் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தேன்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை தவறு விடுகின்ற போது அதை நேரடியாக உங்களிடம் சொல் வார்களானால் அவர்கள் செய்த அந்த நேர்மையான அறிக்கை உங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்.

தாவீது நேரடியாக பாவத்தை அறிக்கை செய்தான், அதனால் அவன் ஏற்றுக்கொள்ளப்பட்டான். எனவே பெரிய பாவம் செய்ய தேவன் எங்களுக்கு அனுமதி கொடுத்துள்ளார் என்று பொருளல்ல. பாவம் செய் வதற்கு தேவன் அனுமதி கொடுத் திருக்கிறார் என்றும் பொருளல்ல. இவரின் முன் மாதிரியைப் பார்த்து ஒரு சொல்லில் பாவத்தை அறிக்கை செய்து கொண்டால் சரி என்பதும் பொருளல்ல. **தெரிந்து கொண்டும் நாங்கள் பாவம் செய்வோமென்றால் தேவன் முற்றி லுமாக எம்மைக் கைவிட்டுவிடுவார்.** இதுவரைக்கும் பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமல் தவிக்கின்ற உள்ளங்கள் நீங்கள் யாராவது இருந்தால் இந்தப் பெரிய பாவத்தை செய்தும் அதை நான் ஏற்றுக் கொள்ளாமல் அதற்குச் சுற்றி சுற்றி சாட்டுப்போக்குச் சொல்கின் றேனே என்கிற உணர்வு உங்களுக் குள் வந்தால் இன்றைக்கு நீங்கள் தேவனைப் பார்த்து சொல்லுங்கள்: 'ஆண்டவரே நான் உமக்கு விரோத மாய் பாவம் செய்தேன்' என்று தேவன் எதிர்பார்க்கின்ற அறிக்கையை செய்ய வேண்டும். 'தேவனே இந்த விடயத்தில் நான் பாவம் செய்தேன், உம்முடைய இரத்தத்தினாலே என்னைக் கழுவும், என் பாவத்தை மன்னியும்' இதற்கு மாறாக எதைச் செய்தாலும் தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**லூக்கா 18:10-14 (10.) இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவால யத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். 11. பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக் காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கி றேன். 12. வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்தி லெல்லாம் தசமபாகம் செலுத்திவருகி றேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணி னான். 13. ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக் கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியா கிய என்மேல் கிருபையாயிரும் என்றான். 14. அவனல்ல, இவனே நீதிமானாக்கப் பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான் என்று உங்களுக்குச் சொல்லு கிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிற வனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.**

இந்த உவமையிலே நாம் பார்க்கும் போது பரிசேயன் - ஆயக் காரன் இருவரும் ஜெபம் செய்யும்படி தேவாலயத்திற்கு சென்றார்கள். பரிசேயன் எல்லாவற்றையும் சொல்லித் துதிக்கின் றான்: நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும் இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். அவன் தேவனு டைய மகத்துவங்களை சொல்லியே துதித்திருக்க வேண்டும். ஆனால் இவனோ நான் இப்படியல்ல என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய கிரியைகளைச் சொல்லி துதிக்கின்றான். ஆனால் ஆயக்காரன் வந்து, தூரத்திலே நின்று தன் மார்பிலே அடித்துக் கொண்டு **'தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்'** என்றான். அவன் இதன் மூலம் என்ன சொல்கின்றான்: ஆண்டவரே என்னிடத்தில் நீதி ஒன்றுமில்லை, நல்லது ஒன்றுமில்லை, என்னிடத்தில் உண்மை ஒன்றுமில்லை, என்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் கறைபட்டு இருக்கின்றது. எனக்கு ஒரு மன்னிப்பு வேண்டும், பாவியாகிய என்மேல் கிருபையாயிரும். இந்த மன்னிப்பை தான் இயேசு ஏற்றுக் கொண்டார்.

## 03. நாவிலே சொல்வரவில்லை: ஆனால் முறையான ஒரு அறிக்கையை பேதுரு இருதயத்தில் செய்தார்

**மத்தேயு 26:74-75 (74.) அப்பொழுது அவன்: அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் கூவிற்று. 75. அப்பொழுது பேதுரு: சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக் கொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான்.**

**நீங்கள் மனிதர்களோடு தனிப்பட்ட பிரகாரமாய் அவர்களுக்கு விரோதமாய் ஏதாவது செய்திருந்தால் அவர்களிடம் வாயைத் திறந்து தனிப்பட்ட பிரகாரமாய் அவர்களுக்கு நீங்கள் செய்த காரியத்தை கூறி மன்னிப்பு கேளுங்கள்.** இங்கே நாவிலே சொல் வரவில்லை. ஆனால் முறையான ஒரு அறிக்கையை பேதுரு செய்தார். இது தேவனுக்கும் எங்களுக்கும் இடையில் ஒரு தனிப்பட்ட காரியமாய் எடுத்துக் கொள்ளலாம். இயேசு பேதுருவைப் பார்த்துக் கூறினார்: இன்றைக்கு சேவல் கூவுகிறதற்கு முன்பதாய் நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய். அதற்கு பேதுரு: ஆண்டவரே நான் அப்படிச் செய்யமாட்டேன் என்று சொன்னார். பின்பு இயேசுவைப் பிடித்துக் கொண்டு சென்றார்கள். பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் அவரைக் கொண்டு சென்றார்கள். பேதுருவுக்கு இயேசுவின் மீதாக இருந்த அன்பின் நிமித்தம் என்ன நடக்கின்றது? என்பதனைப் பார்க்கப் போகின்றார். பேதுரு நெருப்பு மூட்டி குறிர்காய்ந்த இடத்தில் சென்று உட்கார்ந்தார். அப்பொழுது ஒரு பெண் வந்து நீயும் அவரோடிருந்தவர் போன்று இருக்கின்றதே என்று சொல்ல, பேதுரு அது நானல்ல என்று மறுதலிக்கிறார். பின்பு இன்னொரு பெண் வந்து சொன்னாள்: உம்மைப் பார்க்க அவரோடு இருந்தவர் போல் இருக்கின்றதே என்று சொன்னாள். ஆனால் பேதுருவோ அது நானில்லை என்று சொன்னார். பின்பு பார்க்கின்றோம்: மற்றவர்கள் வந்து உன்னுடைய சாயலைப் பார்க்கத் தெரிகிறது, நீ அவரோடு இருந்தவன் தானே என்று சொன்ன போது, இல்லை அவரை எனக்குத் தெரியாது என்று சொல்லி இயேசுவை சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினார். அப்பொழுது சேவல் கூவிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மத்தேயு 26:75 அப்பொழுது பேதுரு: சேவல் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக்கொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான்.**

இது தான் பேதுருவிடம் இருந்த ஒரு நல்ல இருதயம். அவர் இயேசு சொன்னதை நினைத்து வெளியே போய் மனங்கசந்து அழுதார். ஆனால் வாயினால் எதுவும் சொல்லவில்லை. அவர் மனங்கசந்து அழுதார். அவர் உள்ளத்திலே உடைந்தார். கண்ணீர் வடிக்கின்றார். தான் செய்த பாவத்தை நினைத்து மனமுடைந்து அழுகின்றார். தேவன் அவருடைய நொறுங்கின இருதயத்தைக் கண்டார்.

தேவனுக்கும் உங்களுக்கும் இடையில் இருக்கின்ற சில பிரச்சினைகளுக்காக உள்ளம் உடைந்தால் மட்டும் போதும், தேவன் அதைக் காணுவார். ஆனால் எங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையில் உண்டாகின்ற பிரச்சினைகளுக்காக நாங்கள் போய் வாயினாலே அறிக்கை செய்ய வேண்டும். மனிதர்களிடம் சொல்லும் போது உடைந்த உள்ளத்தின் சத்தம் நாவாலே வர வேண்டும். தேவனோடு நீங்கள் சொல்கின்ற போது உண்மையாய் உள்ளம் உடைந்திருந்தால் போதும். ஆனால் ஆதாமுக்கோ, யூதாஸ்காரியத்திற்கோ அறிக்கை செய்கின்ற ஒரு உள்ள உடைவு வரவில்லை. தாவீதுக்கு அந்த அறிக்கை செய்கின்ற நிலை வாயினாலும் வந்தது. உள்ளத்தினாலும் வந்தது. பேதுரு உள்ளம் உடைந்த நிலையோடு இருதயத்தாலே செய்த அறிக்கையை கர்த்தர் கண்டு கொண்டார். தேவன் எதிர்பார்க்கின்ற நல்ல அறிக்கையை நாங்கள் ஒவ்வொருவரும் சரியாய் செய்ய வேண்டும். எங்களுக்கு நித்திய வாழ்வு வேண்டுமென்றால் எங்கள் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்ட ஒரு நிச்சயம் எங்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட இருக்க வேண்டும். குற்ற உணர்வு அற்ற நிலை எங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். மற்றவர்கள் உங்களைப் பார்த்து நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள், பாவம் செய்துவிட்டீர்கள் என்று சிந்திக்கலாம். ஆனால் அவர்கள் சிந்திக்கின்ற பாவம் உங்களுடைய வாழ்க்கையில் இருக்கக் கூடாது. எனவே தேவன் எதிர்பார்க்கின்ற அந்த உடைந்த இருதயம் எங்களுக்கு இருக்க வேண்டும்.

நாங்கள் பாவம் செய்தால் உணர்ந்து தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும். அநேக பாவங்களை ஒரு அறிக்கையிலே தேவனுக்கு தெரியப்படுத்தலாம். அவ்விதமாய் உள்ளம் உடைந்திருக்க வேண்டும். உள்ளத்திலே பாவ அறிக்கை செய்யப்பட்டு வெளிவந்த ஒரு வார்த்தையை தேவன் ஏற்றுக்கொண்டார். நாங்கள் தூய்மையானவர்களாய் வாழ வேண்டுமென்றால், ஒரு நித்திய வாழ்வு அடைய வேண்டுமென்றால் சரியான பாவ அறிக்கை செய்ய வேண்டும். **சொன்னதை சொன்னது என்று சொல்லுங்கள். செய்ததை செய்தது என்று சொல்லுங்கள். உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொல்லுங்கள். மற்றதெல்லாம் தீமையினால் வந்தது.**

முடிவாக வேதம் சொல்கிறது: 'மனிதன் தாயின் வயிற்றில் பிறக்கும் போதே பாவத்தோடு பிறக்கிறான்' பாவ அறிக்கை செய்து மன்னிப்பு பெற்றதன் மேன்மை நியாயத்தீர்ப்பு நாளில் தெரியவரும். பூமியிலே தேவன் உனக்கு தந்த சந்தர்ப்பத்தை வீணடிக்காமல் உன் பாவங்களை அறிக்கை செய், மன்னிப்பை இயேசுவிடமிருந்து பெற்றுக்கொள். பாவம் செய்யும் கிறிஸ்தவனாக நீ வாழ்ந்து கொண்டு தூய்மை அடையவேண்டும் என்பதை மறந்து போனவனாக இருந்தால், கிறிஸ்தவ போர்வைக்குள் இருக்கின்றாய்.

உன் இருதயம் பாவ அறிக்கை செய்வதற்கு ஆயத்தமாக இல்லையென்றால் யார் வந்து கூறினாலும் அந்த அறிக்கையை செய்யமாட்டீர்கள். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அருகில் தேவன் வந்து பேசிய போதும் அவர்கள் தங்கள் பாவத்தை மன்னிக்கும்படி கேட்கவில்லை. ஆனால் தேவன் அனுப்பிய மனிதன் நாத்தான் வந்த போது தாவீது தான் பாவம் செய்ததை ஏற்றுக்கொண்டான். பாவ அறிக்கை செய்வதற்குரிய இருதயம் இல்லாதவர்கள் சொல்லும் வார்த்தை எங்கள் பாவத்தை தேவன் பார்த்துக் கொள்வார். தேவன் மனிதனுக்கு கொடுத்த சுயாதீனத்திற்குள் வலுக்கட்டாயமாக நுளையமாட்டார். எனவே நீயாக உணர்ந்து உன் பாவத்தை யார் உணர்த்தினாலும் உடனடியாக மனந்திரும்பி பாவ அறிக்கை செய்துகொள். எமது தவறுகளை தேவ ஆவியானவர் உணர்த்தலாம் அல்லது உனக்கு மேலாகவுள்ள ஒருவரைக் கொண்டு உணர்த்தலாம். அல்லது உனக்கு கீழாக உள்ள ஒருவரைக் கொண்டும் உணர்த்தலாம். வேத வசனங்களைக் கொண்டும் உணர்த்தலாம். அல்லது தேவனே உன் முன் வந்து நின்றும் உணர்த்தலாம். உடனடியாக பாவ அறிக்கை செய்து கொள்ளுங்கள். 'உன் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடு: அப்போது நீ வாழ்வடைவாய்'.

**'தேவன் தாமே**
**உங்களை நிறைவாக**
**ஆசீர்வதிப்பாராக'**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏன் கெட்டுப்போனான்?

**வேதப்பகுதி: லூக்கா 15:12-16**

**கெ**ட்டகுமாரன் கெட்டுப் போனதற்குக் காரணம் என்ன? அவன் கெட்டவனாயிருந்தான் என்பது அல்ல முக்கியக் காரணம். 'அவன் தன்னுடைய தந்தையைவிட்டு விலகிப்போனதே' முக்கிய காரணம். அவன் தந்தையின் நல்ல ஆலோசனைகளைக் கேட்கவில்லை. நண்பர் களின் கெட்ட ஆலோசனைகளைக் கேட்டான். அவன் தகப்பனுடைய அன்பை புறக்கணித் தான். ஜாலியாக வாழ்வதற்கே முக்கியத்துவம் செலுத்தினான். எனவே தான் கெட்டுப்போனான்.

உன் பெற்றோருடைய உறவைவிட நீ ஜாலியா யிருப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்காதே. உன் பெற்றோருடைய நல்ல ஆலோசனைகளைக் கேள். நண்பர்களின் கெட்ட ஆலோசனை களைக் கேளாதே. உன் பெற்றோருடைய அன்பையும், உறவையும், அறிவுரைகளையும் முக்கியமாக நினை என்றும் கெட்டுப் போகமாட் டாய். உன் தேவன் உன் பெற்றோரைவிட மிக மிக நல்லவர். அவருடைய நல்ல உறவைத் தேடு.

சிந்தனைக்கு:-

**பெற்றோரின் ஆலோசனைகளை அசட்டை செய்யாதே. நண்பர்களின் தீய ஆலோசனையில் நடவாதே.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள் – ஜூன் 26

# அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை. காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா. அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர். மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி. இங்கிலாந்து. இத்தாலி. அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:.......................................

முகவரி:.......................................

.......................................

.......................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org